புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

SUPPLEMENT TO
THE HINDU ORGAN.

விரோதி௵ (1889 ஆவணிமீ உ௳ ஆரம்பமானது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—௪௮ } யாழ்ப்பாணம்:— தாது௵ வைகாசிமீ உ௬௳ (1936 ஜூன் 8) திங்கட்கிழமை { இலக்கம்—௧௭.

திருவைந்தெழுத்தின் சிறப்பு

வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதியது

"பிறவிக்கடலைக் கடத்தற்கு மாத்திரமன்றி சமணர்கள் கட்டியிட்ட கல்லை மிதக்கச்செய்து தெண்ணீர்க் கடலைக் கடத்தற்குத் தோணியாக நின்றதும் இப்பஞ்சாக்கரமே."

(முற்றொடர்)

இனி, இப் பஞ்சாக்கரத்தைக் குருமூலமாக அறிந்து நிட்டை கூடுவோர்க்கே முத்தி சித்திக்கும். அதனை,

"செஞ்சுடர் மண்டலத்
தூடுசென் றப்புற
மஞ்சன வும்முறை
யேறி வழிக்கொண்டு
துஞ்ச மவன்சொன்ன
காலத் திறைவனை
நெஞ்சென நீங்கா
நிலைபெற லாகுமே."

என்னுந் திருமூலர் வாக்கானும்

"ஊனி லுயிர்ப்பை
யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை
யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந்
தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன
வஞ்செழுத் தும்மே"

என்னுஞ் சம்பந்தசுவாமிகள் வாக்கானும்,

"அஞ்செழுத் தாலுள்ள
மானுடமை கண்டரனை
அஞ்செழுத் தாலர்ச்சித்
திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங்
கோதண்டஞ் சாணிக்கி
லண்டனுஞ்
சேடனு மக்கு"

என்னும் மெய்கண்டார் வாக்கானு மறிக.

இங்ஙனம் பஞ்சாக்கர நிட்டை கூடி வருங்கால், வகாரத்தில் நகாரமும் யகாரத்தில் மகாரமும் ஒடுங்கும். பின் யகாரம் சிகாரத்தில் ஒடுங்க, வகாரமும் சிகாரத்தில் ஒடுங்கும். அப்பொழுது சிகாரமு மொடுங்கச் சிவன்முத்தி வரும். அதனை,

"நகரமொடு மகரமது சடங்கரு காரணமா நாடுமவை நீங்கியிடு வகையை நவிலுதங்கேள்—வகரமதி னகரமுதல் யகரத்திற்றுனே மகரமு நீங்கிடு மரிய சிகரமது தன்னுல்—யகரலயம் வகரமுந்தான் சிகரத்தி லொடுக்கமாகு மிறைநீங்க வுயிர் முத்தி பெய்து மென்றே—தகரகுறக் கரியதமுன் மாதுக்கிறைவன் றனது திரு வுளமகிழ்ந்து சாற்றினனன் குணார்க்க" என்பதனு னறிக.

இக்கருத்துப்பற்றியே,

"சிவன்சத்தி சீவன்செறுபல மாயை
யவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
சிவனசத்தி தன்னுடன் சீவனர் சேர
வவஞ்சேர்த்தபாசமணுகல்லாவே"

என்று திருமூலநாயனரும்,

"மாயகட் போனையும் மாயா
மலமெனும் மாதரையும்
வியனிட் டோட்டி வெளியே
புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்
றாதையைக் கூடிப்பின்றாயை மறந்
தேயுமதே நிட்டையென்று
னெழிற்கச்சியேகம்பனே"

என்று பட்டினத்தடிகளும்,

"நகரமாகிய சேரியை
நஞ்சென வெறுத்து
மகரமாகிய மயலெலாம்
வேரொடு மறுத்து
வகரமாகிய வனத்தினி
லிருகதிரைப் பாறிச்
சிகரமாகிய நகரியை
யடைந்தனன் சீவன்"

என்று பஞ்சாட்சரப் பதி பசு பாச விளக்க நூலுடையாருங் கூறினார்கள். நிட்டை கூடுதலாகிய இவ்விதி சூக்கும பஞ்சாக்கரத்துக்கென வறிக.

இனி, பஞ்சாக்கரத்தைச் செபிப்போர் அன்போடு செபித்தல் வேண்டும். அன்போடு செபிப்பார்க்கே அது பயன் கொடுக்கும். அதுபற்றியே,

"காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே"

என்று சம்பந்த சுவாமிகளும்,

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

* * *

திருவாரூர்:- பண்-பழம் பஞ்சுரம்

இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப்
பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம்வந் தெனையாண்ட
அருமருந்தென் னாரமுதை
வெங்கனல்மா மேனியனை
மான்மருவுங் கையானை
எங்ஙனம்நான் பிரிந்திருக்கே
னென்னாரூ ரிறைவனையே

—சுந்தரமூர்த்திசுவாமிகள்

* * *

உலகம் போற்றும் உத்தமர் நபி(ஸல்) அவர்கள்

திரு. T. B. ஜாயா B. A. (Lond) எழுதியது

இஸ்லாத்தின் கொள்கையைப்பற்றி ஸஹீறாக் கல்லூரித் தலைமை ஆசிரியரும் அரசாங்கசபை அங்கத்தவருமாகிய திரு. டி. பி. ஜாயா அவர்கள் எழுதுவதாவது:- "சர்வமதங்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும். நபிகள் திலகம் அவர்கள் பேரில் நம்பிக்கை கொள்வதுபோல் உலகத்தில் எந்தெந்த ஜாதியார்க்கிடையில் தீர்க்கதரிசிகள் அனுப்பப்பட்டனரோ அவர்கள் எல்லோர் மீதும் நம்பிக்கைகொள்ளுதல் ஓர் முஸ்லிமின் கடமையாகும். மற்ற ஜாதியார்களின் தீர்க்கதரிசிகளை நம்பாதவன் முஸ்லிமல்லவென மதம் போதிக்கின்றது"

நபிகள் பிரானாகிய முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களே, உலகிடைத் தோன்றிய மத சீர்திருத்தக் காரருளெல்லாம் தலைசிறந்தவர்களாவார்கள். பல அல்லல்களையும் இடையூறுகளையும் தகர்த்து எதிரது வெற்றிகண்டு விளங்கிய பெருந்தகையாளரும் அவர்களே என்பது கண்கூடு.

ஒளிகாட்டியாகிய "என்சைக்கிளோ பீடியா" என்னும் நூலில் "குர்ஆன்" என்னுந் தலைப்பின் கீழ் உலகிடைத் தோன்றிய தீர்க்கதரிசிகளினும், மத சீர்திருத்தக் காரரினும, மிக்க வெற்றியடைந்தோர் நபி முகம்மதே எனப் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நபிகள் அவதாரமெடுத்த பூமியில் அவர் பிறப்பதற்கு முன் வசித்தவர்கள் மகா கொடியவர்கள். அவர்கள் தேசாபிமானச் சட்டங்களை உணர்ந்திருக்கவில்லை. சீர்திருத்தத்தின் அவயவங்களுக்கிணங்கியிருக்கவுமில்லை. கலந்துறவாடுதல் முதலிய மூல பாடங்களைக் கற்றிருக்கவுமில்லை. கல்வியின் வாடையையாவது முகர்ந்திருக்கவுமில்லை. அல்லது பிறதேச மனிதருடன் ஓர் சம்பந்தமுடையவர்களாயு மிருக்கவுமில்லை. அல்லது தமக்குள்ளே ஒருமித்தவொற்றுமை யுடையவர்களாயுமிருக்கவில்லை. சுருங்கக் கூறுமிடத்து அவர்கள் அறிவீனமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியிருந்தனர். ஆகலின் அவர்களைத் திருத்தவது இன்றியமையாக் கடமையாகக் காணப்பட்டது. யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவர்களைத் திருத்தத் தம்மால் இயன்ற மட்டும் முயற்சித்த போதிலும் அவர்கள் வெற்றியடையவில்லை. அந்த அராபியர்களுள்ளே காணப்பட்ட "ஹனீபிய்யா" என்னும் அத்தாங்க இயக்கமும் சிறிது காலத்தில் அழிந்துவிட்டது. அவ்விதச் சந்தர்ப்பத்தில் நபிகள் திலகம் அவர்கள் உதயமாகிச் சிறிது காலத்திற்குள் அரபிதேசத்தின் வானத்தையும பூமியையும் புரட்டி, மிக்க கீழ்நிலைமையடைந்த விக்கிரக ஆராதனைக்காரர்களை, ஏக தெய்வக் கொள்கையின் உன்னத பீடத்தில் வீற்றிருக்கச் செய்து உலகத்தின் நான்கு திசைகளிலும, "அல்லாகு அக்பர்" ஆண்டவனே பெரியவன் என்னும் ஓசையை முழங்கச் செய்து விட்டனர்.

வணக்கத்தில் உன்னத பதவி

எல்லா அடியார்களைக் காட்டிலும் அந்த அராபியர்கள் தமது வணக்கத்தில உன்னத பதவியையடைந்தனர். ஏனெனில் அவர்கள் அன்றாட முயற்சிகளில் ஈடுபட்டிருந்த காலத்திலும் "அல்லாகு அக்பர்" என்னும் சப்தம் அவர்களின் காதுகளில் விழுந்தவுடன் தெய்வ மோகத்தில் மூழ்கினவராய் வணக்கத்தில் ஈடுபடுவர். அவர்கள் வெளித்தோற்றத்தில் பலவீனராய்க் காணப்பட்ட போதிலும உண்மையில் ஓர் படி மேலமர்ந்தே விளங்கினர். அவர்கள் தங்களின் ஆத்மாக்களைச் சுத்தப்படுத்துவதற்காகத் தெய்வ வணக்கத்தின் உன்னத ஸ்தானத்தை அடைந்திருந்ததோடு இவ்வுலகுக்குரிய கைங்கரியங்களிலும அதி உன்னத பதவியையடைந்திருந்தனர். உரோமர்கள் பாரசீகர்கள் மிலேச்சர்கள் எல்லோரும் அவர்கள் பாதபடியில் வீழ்ந்து

தொடர்ச்சி 7-ம் பக்கம்

சத்தியச் சங்கு

[முற்றொடர்]

6.

கோபமற்றுக் குணமிகுந்த நல்லோர் முன்னால்
கூர் மழுங்கும் ஆயுதங்கள் என்றூதுவோம்
பாபமற்ற வாழ்க்கையுள்ள பண்பாளரை
பயமுறுத்த ஒன்றுமில்லை என்றூதுவோம்

7.

அன்புகொண்டு ஆசையற்ற நல்லார்களை
அரசனும் வணங்குமென்று சங்கூதுவோம்
வம்பு துன்பம் வஞ்சமாயம் எல்லாமிதோ
வழிகொடுத்து விலகுமென்று சங்கூதுவோம்

8.

கொல்லுகின்ற தில்லையென்ற நல்லோர்கள்பேர்
குவலயத்தில் வாழுமென்று சங்கூதுவோம்
வெல்லுகின்ற போதுமாசை விட்டார்களே
வீரர்தீரர் சூரரென்று சங்கூதுவோம்

9.

ஆன்மசக்தி கண்டுகொண்ட அன்பாளரை
அடிமையாக்க யாருமில்லை என்றூதுவோம்
தான்மறந் தகந்தைவிட்ட தக்காரையே
தலைவணங்கும் உலகமென்று சங்கூதுவோம்

10.

சாந்திசாந்தி சாந்தியென்று சங்கூதுவோம்
சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
கால்நடக்கும் வேதமென்று சங்கூதுவோம்

11.

அன்புதான் தெய்வம் ஏழைக்
கருள்வதத் தெய்வ பூசை
முன்பு நாம் மஹமத் ஏசு
புத்தருட மொழியக் கேட்டோம்
என்பெலாம் உருக ஏழை
எளியவர்க் காக வாழும்
வம்பிலா மார்க்கந் தந்த
காந்தியார் வாழ்க வாழ்க.

— நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை

திருவைந்தெழுத்தின் சிறப்பு

(1ம்-பக்கத் தொடர்ச்சி.)

"எளிய வாதசெய்
வாரெங்க ளீசனை
யொளியை யுன்னி
யுருகு மனத்தாராய்த்
தெளிய வோதிச்
சிவாய நமவெனும்
குளிகை யிட்டபொன்
னாக்குவன் கூட்டையே"

என்று திருநாவுக்கரசு நாயனாரும் கூறினார்கள்.

இனிப் பஞ்சாக்கரத்தைச் செபிக்கும் வகையும், வாசிகம், உபாஞ்சு, மானசிகம் என மூன்றாகும். அவற்றுள் வாசிகமாவது:—வாயினால் தன் காதிற் கேட்குமாறு உச்சரிப்பது. உபாஞ்சுவாவது:-காதிற்குக் கேளாதபடி நாவை அசைத்து உச்சரிப்பது. மானசமாவது மனத்தால் தியானிப்பது. வாசிகத்தில் உபாஞ்சுவும், உபாஞ்சுவில் மானசிகமும் சிறந்தனவாகும். பஞ்சாக்கரத்தைச் செபிக்கும் போது ஆயிரமுருவிற் குறையாமற் செபித்தல் வேண்டும். ஆயிரம் உருச்செபிப்பது உத்தமமாகும். நூறு உருச் செபிப்பது மத்திமமாகும். அதிற் குறையச் செபிப்பது அதமமாகும். செபிக்கும்போது முதலிலும் முடிவிலும் பிராணாயாமஞ் செய்து செபித்தல் வேண்டும். பிராணாயாமத்தோடு செபிப்பது கர்ப்பமென்றும், அஃதின்றிச் செபிப்பது அகர்ப்பமென்றுஞ் சொல்லப்படும்.

பஞ்சாக்கரத்தை உருக்கணித்துச் செபிக்கும்போது, விரல், ரேகை, புத்திரஜீவமணி, சங்கமணி, பவளம், படிகம், முத்து, தாமரைமணி, பொன்மணி, தருப்பைமுடிச்சு உருத்திராக்கம் என்னும் இவைகளை வைத்துக் கணித்தல் வேண்டும். விரலிலும் பார்க்க அதன் ரேகையிற் கணிப்பது எட்டுமடங்கு பலனுடையதாகும். அதினும் புத்திர ஜீவமணியிற் கணிப்பது பத்துமடங்கு பலனுடையதாகும் அதிலும் சங்கமணியிற் கணிப்பது நூறுமடங்கு பலனுடையதாகும் அதினும் பவளத்திற் கணிப்பது ஆயிரம் மடங்கு பலனுடையதாகும். அதிலும் படிகத்திற் கணிப்பது பதினாயிர மடங்கு பலனுடையதாகும். அதிலும் முத்திற் கணிப்பது இலக்கம் மடங்கு பலனுடையதாகும். தருப்பை முடிச்சிலும், உத்திராக்கமாலையிலும் கணிப்பதோ அளவிலாத பலனுடையதாகும்.

இவ் விசேடம் பற்றியே பஞ்சாக்கரத்தைச் செபிப்போர் உருத்திராக்கமாலை வைத்துச் செபித்தல் வேண்டுமென்று திருஞான சம்பந்த சுவாமிகளும் தாமருளிச் செய்த நமச்சிவாயப் பதிகத்திலுள்ளே,

"நெக்கு ளார்வ மிகப்பெருகிநினைந்
தக்க மாலைகொ டங்கையி
லெண்ணுவார்த்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க நாம நமச்சி வாயவே"

என்னுந் தேவாரத்தால் திருவாய் மலர்ந்தருளினர்.

உருத்திராக்கமாலை வைத்துச் செபிப்போர் நூல்களிற் கூறியவளவின்படி கோவை செய்த வடங்களை வைத்துச் செபித்தல் வேண்டும். பதினைந்து மணிகளையுடைய மாலை அதிகார யந்திர சித்தியையும் 25 மணிகளையுடைய மாலை முத்தியையும், 27 மணிகளையுடைய மாலை புஷ்டியையும், 30 மணிகளையுடைய மாலை ஐசுவரியத்தையும் கொடுக்கும். இவற்றுள் 25 மணிகளையுடைய மாலையை முத்தியை விரும்பினோர்களும், மற்றைய மாலைகளை இல்வாழ்வானும் வைத்துச் செபித்தல் வேண்டும இல்வாழ்வான் நூற்றெட்டு மணிகளையுடைய மாலையையும், ஐம்பத்துநான்கு மணிகளையுடைய மாலையையும் வைத்துச் செபிக்கலாம். விரலிற் கணிப்போர்க்கு பெருவிரல் முத்தியையும், சுட்டுவிரல் சத்துருநாசத்தையும், நடுவிரல் பொருளையும், மோதிர விரல் சாந்தியையும், சிறுவிரல் யாவற்றையும் கொடுக்கும்.

பஞ்சாக்கர செபஞ் செய்வோர் வீடு பசுமந்தை நிற்குமிடம், நந்தனவனம், வனம், புண்ணியபதி, புண்ணிய நதி, தேவாலயம், சிவசந்நிதி என்னும் இவ்விடங்களிலிருந்து செபித்தல் வேண்டும்.

பஞ்சாக்கர செபஞ் செய்வோர் சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக் கொண்டும், தலைமயிரை விரித்துக் கொண்டும், வஸ்திரமில்லாமலும், பவித்திர மணியாமலும், இருந்து செபித்தலாகாது. இன்னும் இவற்றிற் கூறாத விதிகளையெல்லாம் விரித்த நூல்களுட் காண்க.

இனி, இப்பஞ்சாக்கரத்தின் மகிமையானது தமிழிலுள்ள சித்தாந்த சாத்திரங்களில் மாத்திரமன்றி, வடமொழியிலே ஆகமங்களிலும், உபநிடதங்களிலும் வேதங்களிலும் கூறப்படுகின்றன. பதினெட்டு வித்தைகளுள்ளும் வேதம் மேலானது; அதனுள்ளும உருத்திரம் மேலானது; அதனுள்ளும், ஸ்ரீ பஞ்சாக்கரம் மேலானது; அப்பஞ்சாக்கரத்துள்ளும் சிவ என்னுமிரெழுத்தும் மேலானது என்னும் பொருள்பட, அபியுக்தரும் ஒரு சுலோகத்திற் கூறினார். கிருஷ்ண யஜுர் வேதத்திலே 4-ம் அத்தியாயத்திலே 5-ம் மண்டலத்திலே, 8 ம் அநுவாக 1-ம் மந்திரத்திலே இப் பஞ்சாக்கர மந்திரம் வருகின்றது. இது பற்றியே திருஞானசம்பந்த சுவாமிகளும் 'வேதநான்கினும் மெய்ப்பொருளாவது நாதனாம நமச்சிவாயவே' என்றார்.

வேதம் முதலிய எந்த நூல்களிலும் எடுத்து விதந்து பேசப்படும் இந்தப் பஞ்சாக்கரத்தின் மகிமையானது சம்மனோராலே சொல்லப்படும் அளவுடைத்தன்று. கயிலாசமலையின்கீழ்க் கிடந்து வருந்திய இராவணனை அதினின்று நீங்கச் செய்ததும் இப் பஞ்சாக்கரமே. திருஞானசம்பந்த சுவாமிகளோடு தர்க்கஞ் செய்யும்படி வந்த புத்த நந்தியினுடைய தலையில் இடி வீழ்த்தியதும் இப் பஞ்சாக்கரமே.

"தனியனேன் பெரும்பிறவிப்
பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு
பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா
ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான்
சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா
றென்றென் றெண்ணி
யஞ்செ ழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த
மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய்
மூர்க்க னேற்கே."

என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியவாறு, மெய்ஞ்ஞானிகள் பிறவிக்கடலைக் கடத்தற்குத் தோணியாய் நிற்பதேயன்றி, சமணர்கள் கட்டியிட்ட கல்லை மிதக்கச் செய்து தெண்ணீர்க் கடலைக் கடத்தற்குத் திருநாவுக்கரசு நாயனாருக்குத் தோணியாய் நின்றதும் இப்பஞ்சாக்கரமே. ஆதலால் இத்தகைப் பெருமையையுடைய பஞ்சாக்கரத்தைப் பிராமணர் முதலிய எவ்வருணத்தவர்களுஞ் செபித்தல் வேண்டும். பஞ்சாக்கர செபமில்லாதவர்கள் சைவசமயிகளல்லர். இதுபற்றியே திருஞானசம்பந்த சுவாமிகள் வைதிக முறையாகச் செய்யப்பட்ட தமது உபநயனச் சடங்கின் கண்ணே இப்பஞ்சாக்கரத்தின் மகிமையை, ஆங்கு வந்த பிராமணர்கள் யாவருக்கும் விளங்க விரித்துக்கூறி, இதனைப் பிராமணர் முதலிய எவ்வருணத்தவர்களுந் திரிகாலங்களிலுஞ் செபித்து வருதல் வேண்டுமென்று "மந்திர நான்மறை யாகி வானவர் — சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன - செந்தழலோம்பிய செம்மை வேதியர்க் — கந்தியுண் மந்திர மஞ்செழுத்துமே" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

சிவபெருமானோடு இரண்டறக் கலக்கும் முத்திக்கு வழியாயுள்ளதும் இப் பஞ்சாக்கரமே. திருஞானசம்பந்த சுவாமிகளும் திருப்பெருமணமென்னும் ஆலயத்திலெழுந்த பரஞ்சோதியுண் மறையப் புகும் பொழுது ஸ்ரீபஞ்சாட்சரமே முத்திக்கு வழி என உலகத்தார்க்கு உணர்த்துவாராய் "நமச்சிவாயப் பதிகத்தை" எடுத்து ஓதியருளினார். அன்றியும் அப்பதிகத்துள் வரும்

'நல்லவர் தீயவ ரெனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செழுத்துமே."

என்னுந் தேவாரத்தானும் அதனை நன்கு வலியுறுத்தினார். ஆதலால் இத்தகைமை வாய்ந்த பஞ்சாட்சரத்தை யாவரும் மெய்யன்போடு செபித்து இட்ட சித்தியைப் பெறுவார்களாக.

கைதியை ஏமாற்றிய கள்ளனா?

சிசுக்கொலை வழக்கின் எதிரொலி.

கண்டி மே 30—

கண்டி ரிமாண்ட் சிறையதிகாரிகளைக் கந்தசாமி யென்பவன் தந்திரமாக ஏமாற்றிய செய்தி இப்போது வெளி வந்துள்ளது. பிரஸ்தாப நபர் ரிமாண்ட் சிறையிலிருந்த மரியாயி யென்ற பெண் தனது தங்கையென்று சிறையதிகாரியிடம் கூறி அவளைத் தான் சந்தித்துப் பேச அனுமதியளிக்கும்படி வேண்டினான். அதிகாரிகள் அளித்தனர். கந்தசாமி அப்பெண்ணைச் சிறையிற் சந்தித்தான். அப்பெண் தனது இரண்டு வயதுக் குழந்தையைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வழக்கு அசைஸ் கோர்ட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கந்தசாமி மரியாயியின் விஷயத்தில் மிகுந்த சிரத்தையுள்ளவன் போல் நம்பும்படி செய்து தான் ஒரு நல்ல நியாயவாதியை அமர்த்தி வழக்கை ஜெயித்துத் தருவதாக அவளிடம் கூறினான். மரியாயியும் அவனை முழுதும் நம்பினாள். நியாயவாதியை அமர்த்துவதற்குப் பணம் வேண்டுமென்று கந்தசாமி கவலைப்பட்டது போல் நடிக்க, அப்பெண் தன்னிடமிருந்த சிறிய ஆபரணங்களைக் கழற்றி அவனிடம் கொடுத்து அவற்றை விற்று அப் பணத்தைக் கொண்டு ஒரு நியாயவாதியை அமர்த்தச் சொன்னாள்.

சில தினங்களுக்கு முன் மேற்படி வழக்கு அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது மரியாயி வழக்கம் போல் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டாள். முந்தின வாயிதவில் அரசாங்கத்தாரால் அவள் சார்பில் வாதிக்கும்படி நியமிக்கப்பட்ட நியாயவாதியே கோர்ட்டில் பிரசன்னமாயிருந்ததைக் கண்ட மரியாயி ஏமாற்றமடைந்தாள்.

விசாரணையின் இறுதியில் அப்பெண் கொலைக் குற்றம் செய்ததாக ஜூரிகள் ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்தனர். நீதிபதி திரு டால்ட்டன் அப்பெண்ணுக்கு மரணதண்டனை விதித்தார்.

இரண்டு தினங்களுக்கு முன் அப்பெண் தான் ஏமாற்றப்பட்ட விதத்தைச் சிறையதிகாரிகளிடம் அறிவித்தாள். போலிஸார் அவள் கூறிய அங்க அடையாளமுள்ள ஒருவனைக் கைது செய்து இன்று போலீஸ் கோர்ட்டில் ஆஜர் செய்தனர் அவனை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவளித்தார்.

கந்தபுராணக் கவி நுட்பம்

புராணபடன மகத்துவம்

(முற்றொடர்)

இந்திர ராகிப் பார்மேல்
இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக்
காதலித் தோதுவோரே.

சற்கருமம் எதனையும் பத்திபூர்வமாகச் செய்யின் அதனாற் பன்மடங்கு பயனுண்டென்பது பெரியார் கொள்கை. இக் கந்தபுராணத்தைப் படிக்கும்போதும் பொருள்பகரும் போதும் கேட்கும்போதும ஆசாரசீலராய் சிந்தியுடன் தவறுதலாய் முருகமூர்த்தி திருவடிகளில் தியானமுடையவராய், விரதம் பூண்டவராய் நியதியுடன் எவரும் படித்தல் வேண்டும் பயன் சொல்லவேண்டும் கேட்டல்வேண்டும் என்பார் "காதலித்தோதுவோரே,' எனக்கூறினர். இப்புராணங்கேட்டலின் மகத்துவத்தை:—

"வேட்டுறிற் சிவபதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டுறிற் சிவபுராணமே கேட்டுற வினைகொண்
டாட்டுமைந்பதை யீறுகண்டந் தகன் மாதர்
விட்டுமுன்னரே சிவகதி விரும்புற வேண்டும்"

எனவும்,

"கள்ளுயிர்த்தபூங் கொன்றையான் அருட்சிவகாதை
எள்ளில் சிந்தையால் விதிமுறை இனிதுகேட்டேவந்து
வெள்ளவார் சடையெம்பிரான் திருவருள் விளைவித்
தேள்ளரும் கதிபுதந்தவர்க் கிலக்கமாரிசைப்பார்"

எனவும் வருவனவற்றால் உணரலாகும்.

ஸ்ரீமுகனென்னும் பிராமணனொருவன் சிதேந்திரிய முனிவர் சொன்னவாறு தனது மக்களுடன் விதிப்படிபுராணங் கேட்டுத் தன்னையும் மக்களையும் பிடித்த வறுமைப் பிணி நீங்கப்பெற்றானென்று உபதேசகாண்டத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. புராணம் படிப்போர் பயன்சொல்வோர் கேட்போர் என்னும் முப்பாலினரும் இந்த மேலான புண்ணியச் செயலைத் தூயராகவே செய்தல் வேண்டும்.

பொருள் சொல்பவர் சிவபக்தியுடையவராய், காமசிருங்காரவர்ணனைகளை விரித்தலின்றிப் பதிபசுபாச இலக்கணங்களையும் சிவனடியார் மகிமையையும் இறைவனுடைய திருவருட்டிறத்தையும் கேட்போர் இலகுவில் விளங்கிப் பயன்பெறும் வண்ணஞ் சொல்லுதல் வேண்டும். வேதனத்தினிமித்தம் படிப்பதும் பயன் சொல்வதும் பெருந் தவறாகும். பக்தியுடன் புராணங் கேட்போர் தக்கினையாக ஏதும் உதவினால் படனஞ்செய்பவர் சிவார்ப்பணமாக அதனை ஏற்றல் குற்றமாகாது.

இப்படிப் பொருள் சொல்லுபவரைப்புராணங் கேட்போர் சூதமகாமுனிவர் போல மதித்து நடத்தல் வேண்டும். புராணங்கேட்கும்போது வெற்றிலை பாக்கு உண்டல், வீண்கதை பேசுதல், உறங்குதல், கால் நீட்டிக்கொண்டிருத்தல், திருமுறைக்கு முதுகு காட்டிக்கொண்டிருத்தல் சிந்தனையைப் பிறிதுவழியிற் செல்லவிடுதல் முதலிய இவைகளெல்லாம் செய்யத்தகாதனவாகும். சிவபுராணத்தைப் பொய்யென்பவர்க்கு நரகமன்றி வேறு புகுமிடம் இல்லையாம்.

புராணம் படித்தற்காகிய ஸ்தானங்கள் திருக்கோயில் திருமடம் ஆற்றங்கரை குளக்கரை பரிசுத்தமான இல்லம் ஆகியவைகளாகும் மேலே சொல்லப்பட்ட நியதிகளுடன் புராணத்தைப் படிப்பவரும் பயன்சொல்பவரும் கேட்பவர்களும் பல தல யாத்திரைகள் செய்த பயனையும் பல புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிய பலனையும் பெறுவார்கள். இதனை:

"இப்பெருஞ் சிவபுராணமுற் றுரைப்பவர் இதனைத்
தப்பில் சிந்தையிற்கேட்பவர் சிவதலந்தோறும்
ஒப்பில் நாதனைத் தொழுபயன் வேள்விமுற்றவந்தோர்
செப்பருந்தநதி நதிபலதுடைபயன் சிறப்பார்"

எனவருதலாலுணர்க.

இவைகளையெல்லாங் குறிப்பாகத் தெருட்டவேண்டியே நமது ஆசிரிய சுவாமிகள் ஓதுவோரே எனவாளா கூறாது காதலித்தோதுவோரே என அடைகொடுத்துக் கூறியருளினர்.

நமது யாழ்ப்பாணத்தின் கண்ணே சைவமக்களாயுள்ளார் தத்தம் கிராமங்களிற் கோயில் கொண்டருளிய குலதெய்வத்தின் சந்நிதியில் இக்கந்தபுராணபடனம் சிரவணமென்னு மிவைகளைக் காலந்தோறுஞ் செய்து இட்ட சித்தியைப் பெற்றுயருதல் கண்கூடத்தென்க.

சிசுக் கொலை வழக்கு

பச்சைக் குழந்தையைக் கொன்ற படுநீலி

18 மாதக் கடுங்காவல்

காலி ஜூன் 2.

பிறந்து ஒரு வாரமான தனது குழந்தையின கழுத்தை நெரித்துக் கொன்றதாக மாத்தறையைச்சேர்ந்த தனசிங்கா அவ்கோஹாமி என்ற ஸ்திரீமீது குற்றஞ்சாட்டப்பட்டுத் தொடரப்பட்டுள்ள வழக்கில் நீதிபதி திரு. ஜஸ்டிஸ் பொய்ஸர் இன்று தீர்ப்புக் கூறினார். எதிரிக்கு 18 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

எதிரியின் கணவனும் இனபந்துக்களும் அவளைக் கவனிக்காமல் விட்டிருப்பதைத் தாம் தண்டனை விதிப்பதில் கவனித்திருப்பதாக நீதிபதி கூறி, குற்றம்புரிந்த காலத்தில் எதிரி புத்தி சுவாதீனமற்றவளாயிருக்கலாமென்றார்.

கீழ்க்கோட்டில் கொடுத்த வாக்குமூலம்

சிசுக்கொலை மாத்தறை உப்பவத்தையில் சென்ற ஜனவரி மாதம் நடந்தது. வழக்காளி தரப்பு நியாயவாதி எதிரி கீழ்க்கோட்டில் கொடுத்த வாக்குமூலத்தைப் படித்தார். அதை எதிரி தரப்பு நியாயவாதி ஆக்ஷேபித்துக் கீழ்க்கோட்டில் சாட்டப்பட்ட இரு குற்றங்களுக்கு விடையளிக்கையில் அந்த வாக்குமூலம் கொடுக்கப்பட்டதாகவும் குற்றங்களில் ஒன்று பீனல்கோடின்படி சாட்டக் கூடியதல்லவென்றும் கூறினார். நீதிபதி வாக்குமூலம் ஒழுங்காயிருப்பதாகக் கூறினார்.

மேற்படி வாக்குமூலத்தில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கிறாள். ஆனால் இன்று அவள் குற்றவாளியல்லவென்றாள். எதிரி தரப்பில் அவளுக்குப் புத்தி சுவாதீன மற்றுப் போவது வழக்கமென்று கூறப்பட்டது. ——

மணமகள் சிறுவனாக மாறினாள்

கிழவன் ஏமாந்தான்.

பாட்னா, மே 30—

லோருநு காலா என்பவன் 70 வயதுக் கிழவன்; விவாகத்தில் அவனுக்கு ஆசை பிறந்தது. பக்கத்துக் கிராமமொன்றுக்குச் சென்றான் 400 ரூபா சுல்கம் கொடுத்து ஒரு 'பெண்ணை' மணந்து கொண்டு ரயிலேறினான். 'பெண்' ஸ்திரீகள் வண்டியிலேறினாள். அந்தப் பொல்லாத ஸ்திரீகள் 'பெண்ணின், குட்டை, பேச்சிலிருந்து கண்டு பிடித்துக் கூச்சலிடவே அதிகாரிகள் வந்தனர். 'பெண்' பெண்ணல்ல பையன் தான் என்ற ஞானோதயம் அப்போது தான் கிழவனுக்கேற்பட்டது

பிலிப்பைன் தீவுகளின் நிலைமை

அமெரிக்க உத்தியோகஸ்தர் கூற்று

இன்னும் 50வருஷங்களுக்கு ஜப்பான் பிலிப்பைன்மீது செல்ல யோசிக்காதாம்

ஜூன் 4ம.

மலேயஜாதியினர் விழித்துக்கொண்டனர். சுறுசுறுப்பாக வேலைசெய்கின்றனர். அவர்கள் அபிவிருத்தியை ஒருவரும் தடுக்க முடியாது என்று பலவருடங்கள் பிலிப்பைன் தீவுகளில் வேலைசெய்த அமெரிக்க உத்தியோகஸ்தர் மிஸ்டர் ஜி என ராகன் சொல்லுகிறார்.

அவரும் அவருடைய மனைவியும் அமெரிக்கா திரும்பிச் செல்லும் மார்க்கத்தில் இலங்கையில் சில நாட்கள் தங்கினர். நேற்றுத் திரும்பவும் பிரயாணம் செய்தனர். ஒரு பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டி கண்டபொழுது அவர் தெரிவித்ததாவது:-

பிலிப்பினோ தேசத்தினர் மலேய ஜாதியைச் சேர்ந்தவர்களே. அவர்களின் சரிதை மிகப் பழமையானது.

அரசாங்கவிஷயத்திலும் கைத்தொழில் விஷயத்திலும் பிலிப்பினோக்கள் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கின்றனர். அவர்களால் மற்ற மலேய ஜாதியினருக்கும் அபிவிருத்தியேற்படும்.

கல்வி முன்னேற்றம்

பிலிப்பைன் ஸ்பானிஷ்காரர்களுக்குப் பாத்தியப்பட்டிருந்தபொழுது கத்தியும் சிலுவையும் இரண்டு கையிலும் கொண்டு ஆட்சி நடத்தினர். அமெரிக்கர்கள் ஒரு கையில் துப்பாக்கியும் மன்றேன்றில் பள்ளிப் புஸ்தகங்களும் கொண்டு ஆட்சி நடத்துகின்றனர்.

இப்பொழுது பிலிப்பைன் தீவின் நிலைமை அமெரிக்கரின் கல்விமுறையின் மேம்பாட்டைக் காட்டுகிறது.

ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பிலிப்பைனுக்கு அனுப்பப்பட்டனர். சிறிது காலத்திற்குள் கல்வி சுகாதாரம், வாழ்க்கைவசதிகள் இவைகளினால் 50 லட்சத்திலிருந்து ஜனத்தொகை 150 லட்சமாக அதிகரித்துவிட்டது.

அபிவிருத்திக்கு உதவி

அற்புதமான ரஸ்தாக்கள் போடப்பட்டிருப்பதால் தீவுகளின் அபிவிருத்திக்குப் பலத்த உதவி ஏற்பட்டது.

தற்சமயம் பிலிப்பைன் தீவுகளில் மிகவும் உயர்தர நிலைமையிலிருக்கும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளுமிருக்கின்றன.

மனிலாவில் ஓர் சர்வகலாசாலை யிருக்கிறது. அங்கு 7000 மாணவர்கள் வரை படிக்கின்றனர்.

10 வருஷத்தில் பூரண சுதந்திரம்

கடந்தவருடம் ஆரம்பிக்கப்பட்ட பிலிப்பைன சாம்ராஜ்ய அரசியல் 10 வருடங்களில் மாற்றப்படலாம். அதற்குள் பிலிப்பைனர்கள் சுயராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களென்றுகாணப்படுமானால் யுனைறெற் ஸ்ரேட்ஸ் அவர்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கும்.

பிலிப்பினோர்கள் அவர்களுடைய அரசியலை நடத்திக்கொள்ள முடியும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. யுனைற்றெட் ஸ்ரேட்ஸ் அதனுடைய வாக்கைக் காப்பாற்றுமென்பதும் நிச்சயம்.

பிலிப்பைன் தீவுகளுக்கு பூரண சுதந்தரம் கொடுத்தபின் ஜப்பான் அதை ஆக்கிரமித்தால் என்னசெய்வது என்று கேட்டதற்கு மிஸ்ரர் ராகன் சொல்லியதாவது.

பிலிப்பினோக்களில் ஒருபகுதியினருக்கு அந்தப் பயமிருக்கிறது. ஒரு பகுதியினர் அதைப்பற்றிப் பயமடையவில்லை.

திறமையான ராணுவம்

ஆனால்சீனவுடனும் ஸோவியத் ருஷ்யாவுடனும் ஜப்பான் மாட்டிக்கொண்டிருக்கும் நிலைமையில் இன்னும் 50 வருடத்திற்கு ஜப்பான் தெற்கே நோக்கி ஆக்கிரமிப்புச் செய்ய யோசிக்கும் பயமில்லை என்று நான் நினைக்கிறேன். அதற்குள் பிலிப்பினோக்களின் ஜனத்தொகை 4 கோடிக்கு அதிகரித்துவிடும்.

பிலிப்பைனில் இப்பொழுது ஓர் திறமை வாய்ந்த ராணுவம் தயாரிக்கப்படுகிறது. விமான நிலையங்கள் தீவெங்குந் தோன்றுகின்றன.

பிலிப்பைனைக் கைப்பற்ற நினைக்கும் எந்தத் தேசமும் வெற்றியடையப் பலத்த நஷ்டமடையவேண்டி வரும்.

மிகுந்த தேசபக்தி

பிலிப்பினோ ஜனங்கள் மிகவும் தேசபக்தி வாய்ந்தவர்கள். இப்பொழுதிருக்கும் தலைவர் எம். குஸ்ஸான் உலகத்தில் பெரிய அரசியல் வாதிகளில் ஒருவர். அவர் 1945ல் சர்வதேசசங்கத்தில் சேரவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தார்.

ஆனால் இப்பொழுது அபிஸினியாவின் கதியினால் சர்வதேசசங்கத்தின்மீது அவருக்கு நம்பிக்கை குறைந்திருக்கலாம்.

பிரான்ஸின் சந்தேகம்

லண்டன் 1

மற்றநாடுகள் யாவும் யுத்த தளவாடங்களைப் பெருக்கிக்கொண்டிருக்கும்போது பிரிட்டன் வாளாவிருப்பது குறித்து பிரஞ்சு சர்க்கார் கவலை கொண்டிருக்கின்றார்கள். புதிய பாதுகாப்புப்படை மந்திரியாகிய சர் தாமஸ் இன்ஸ்கிப் காமன்ஸில் முதல் தடவையாகப் பேசிய பின்னரே இக்கவலை அதிகரித்தது. "இன்டிரான்ஸிஜியான்ட்" என்னும் பிரேஞ்சு பத்திரிகை பின்வருமாறு அபிப்பிராயம் எழுதியிருக்கிறது:—

"ஐரோப்பாவிலும் உலகமுழுவதிலுமே சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு பிரிட்டன்தான் சரியான நாடு. ஆனால் பிரிட்டன் பலமுள்ள நாடாகக் காணப்படவில்லை. இப்பொழுதுதான் பிரிட்டன் பலந்தேடி வருகின்றது."

"லிடெம்ஸ்" என்னும் பத்திரிகை பின்வருமாறு அபிப்பிராயம் எழுதியிருக்கிறது:—

"பிரிட்டன் ஐரோப்பாவில் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்துவைக்க முன் வருகின்றது. ஆனால் இந்த வேலையைச் செய்துமுடிக்கப் போதுமான இராணுவ பலம் பிரிட்டனிடம் கிடையாதென்பது இப்பொழுது தெரியவருகிறது. இத்தாலியின் ராணுவபலத்தையும் பொருளாதார நிலைமையையும் பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் தப்பிதமாக அபிப்பிராயப்பட்டனர்."

மாதரை விரும்பாத மகாவீரன் ஹிட்லர்

சினிமா நடிகையின் கூற்று

"ஹிட்லர் சாதாரண மனிதனல்ல, மாதர்களாகிய எங்களுக்கு அவர் ஓர் அவதார புருஷனாகவோ அல்லது தேவனாகவோ தோன்றுகின்றார்"

ஜெர்மனி நாஸி இயக்கத்தின் தலைவராயிருந்து கொண்டு ஐரோப்பா மாத்திரமேயன்றி உலக முழுவதையுமே ஆட்டிவைக்கும் ஹிட்லர், ஆலாய்ஸ் என்றவருடைய குமாரர். ஆலாய்ஸ் என்பவருக்கு மூன்று மனைவியர். அடால்ப் என்ற ஹிட்லருடைய தாயின் பெயர் கிளாரா சிறு வயதிலேயே அடால்ப் என்பவரை அவருடையதாய்க்குப் பிடிக்காது. அவரை ஏதோ பைத்தியம் பிடித்தவரென்றும் எதற்கும் உதவமாட்டாரென்றும், தாய் தந்தையருக்கு எந்த விதமான பயனும் அவரால் உண்டாகாதென்றும் நினைத்தாள். அவரால் குடும்பத்தில் அடிக்கடி சண்டையும் சச்சரவும் உண்டாகும். தாய் கண்டவாறு கதறுவாள்.

இவருடைய தந்தை மிகுந்த குடிகாரராயினும் தன்மகன் சாராய விடுதிகளுக்குப் போகக் கூடாதென்று கடுமையான உத்திரவு செய்திருந்தார்.

சிறு வயதிலேயேசிலசிறுவர்களைச் சேர்த்து விளையாடுவார் ஹிட்லர்.

ஒரு சமயம் சில பெண் குழந்தைகளைத் தம் விளையாட்டுச் சேனையில் சேர்த்து அவர்களை ஒரு தனிப் படையாக வகுத்தார். விளையாடும்பொழுது, இப்பெண்படை தோல்வி அடைந்தது. அதற்காகக் கொம்புகளால் அப் படையிலிருந்த பெண்களை அடித்தார்கள். அப்பொழுது அப் பெண்கள் 'கோ' வென்று கதறியழ ஆரம்பித்தார்கள். "ஓ! நீங்கள் எல்லாம் படையிற்சேர யோக்யதையுடையவர்கள் அல்லர்! ஓடிப் போங்கள்" என்று சொல்லி விரட்டியடித்தார் ஹிட்லர். அதுமுதல் பெண்களை வெறுக்கத் தலைப்பட்டார். தான் ஜென்ம வேலையாகக் கொண்டுள்ள பெருங் காரியத்திற்குப் பெண்கள் ஒரு பெரும் தடையே என நினைக்கின்றார். ஆனதால்தான் தன்னைச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் சில பெண்மணிகளின் மோக வலையிற் சிக்காது இருந்து வருகிறார்.

மாலையில் ஹெர் ஹிட்லர் தமது உத்தியோக காரியாலயத்திலிருந்து தமது விடுதிக்குச் செல்லும் பாதையில் உள்ள ஸ்திரீகள் அனைவரும் அவரைப் பார்த்து வியந்து ஏங்கிய வண்ணமே இருப்பார்கள். எப்பொழுதும் ஹிட்லர் ஒன்றும் புலப்படாதவரைப் போலவே காணப் படுவார்.

நூற்றுக் கணக்கான காதற் கடிதங்கள் பற்பல நாட்டு அழகிய மாதர்களிடமிருந்தும் ஹிட்லருக்கு வந்துகுவிந்துகொண்டிருக்கின்றன.

அவர் ஒரு சமயம் யாரையோ காதலிப்பதாகக் கூறினார். கூட இருந்தவர்கள் 'யாரை' என்று கேட்ட பொழுது எகிப்து தேசத்து அழகிய இராணி ஒருத்தியின் கற்பதுமையைக்காண்பித்தார். எகிப்து தேசத்து அழகிய பொருட்காட்சிச் சாலைத் தலைவர் அப் பதுமையைத் தமது தேசத்துக்குத் திருப்பியனுப்பிவிட வேண்டுமென்று கேட்ட பொழுது, ஹிட்லர் தான் காதலிக்கும் அப் பதுமையைத் திருப்பித்தர முடியாதென்றார்.

நடன மாதரும், பாடகிகளும் ஹிட்லரின் நன் மதிப்பைப் பெற்றவர்களே. ஒரு சமயம் ஒரு ஜெர்மன் சினிமா நடிகையை ஹிட்லர் நேசிப்பதாக ஒரு வதந்தி உலாவியது. அச் சினிமா நடிகை 'ஹிட்லர் சாதாரணமனிதனல்ல! மாதர்களாகிய எங்களுக்கு அவரைப் பார்த்தால் ஓர் அவதார புருஷனாகவோ அல்லது தேவனாகவோ காண்கிறது' என்றாள்.

சங்கீதம் கேட்பதே ஹிட்லரின் பொழுது போக்கு. ஹிட்லர் குழந்தைகளிடம் அதிகப் பிரியங் கொண்டு அவர்களுக்காகத் தனியான வேட்டைக் காட்சிகள்; விருந்துகள்; வேடிக்கைகள்; முதலியன அனைத்தும் தமது வாசஸ்தலத்தில் நடத்துவார்; குழந்தைகளை ஆகாய விமானங்களில் ஏற்றி வேடிக்கை காட்டி விடும்படி செய்வார்.

வாசென் பெல்ட் என்ற அவருடைய மலை வாசஸ்தானமே அவருக்கு மிகப் பிரியமான இடம். அங்கும் தனிமையாகவே இருப்பார். நாள் முழுவதும் நீந்துவதிலும், படகு ஓட்டுவதிலும், தமது நேரத்தைக் கழித்து விட்டு, தன்னுடைய நாய் தனக்காகக்கொண்டு வந்திருக்கும் சிற்றுண்டியை அருந்தித் திரும்புவார்.

"ஹிட்லர் ஏன் மணஞ் செய்து கொள்ளக் கூடாது?" என்று அவருடைய நண்பர்கள் கேட்டால் தான் ஏழையென்றும், ஒரு மனைவியைப் படைக்கத் தகுந்த அந்தஸ்து தனக்கில்லை என்றும் கூறுவார். ஹிட்லரை மணக்கத் தக்க மாதும் இருக்கிறாளோவென்று ஜர்மனியர் ஆச்சரியப் படுகின்றனர்.

—விநோதன்

---

56 ஆண்டுகளாக அன்னாகாரம் இல்லை

அற்புதமான யோகினியாரின் அதிசயயோகம்

பண்டைக்கால நூல்கள் கூறுவனவற்றில் நம்பிக்கை கொள்ளாதோர் இதற்கு யாது கூறுவாரோ?

56 வருடகாலம் அன்னாகாரம் இல்லாமல் ஒருவர் இருக்க முடியுமா? இது வீண் கதை என்றுதான் இக்காலத்துள்ள நாகரிகம் படைத்த சனங்கள் சொல்லக்கூடும். ஆனால் இந்தப்புதினம் பொய்யல்ல, முழுவதும் மெய்யென்பது இதனைப் படிப்போர்க்கு இனிது புலப்படும். இது கல்கத்தாவிலிருந்து வெளிவரும் அமிர்தபஸார் பத்திரிகை (31-5-36) யிலிருந்து மொழிபெயர்த்து வெளியிடப்பட்டதாகும். வங்காளத்தைச் சேர்ந்த பன்குரு என்னும் பிரிவில் பாத்திரஸாயாறு என்னும் கிராமத்தில் ஸ்ரீமதி கிரிபாலதேவி யென்னும் நாமமுடைய ஒரு கோஸ்தாப் பெண் சென்ற 56 வருடகாலமாக எவ்வகையான உணவுமில்லாமல் தபம் செபம் என்னும் இவைகளைச் செய்து கொண்டு காலம் போக்கி வருகிறார். இவ்வுத்தமிக்கு இப்பொழுது வயசு 68 ஆகும். இவருடைய தீட்சா நாமம் சுவாமி யோகாநந்தகிரி. காசியிலுள்ள குருஷாமசரன் லகிரி என்பவரிடத்தில் இவர் தமது 12 வயசில் ஞானோபதேசம் பெற்றனர். 12 வயசுக்கு முந்தியே இவர் இல்வாழ்க்கையிற் புகுந்துள்ளார். ஞானோபதேசம் பெற்ற காட்டொடக்கம் இற்றை வரையில் நாள் தோறும் குறித்த நேரத்தில் ஒரு துளசியிலையை வாயிலிட்டு உட்கொள்வது மாத்திரம் உண்டு. ஒரு துளி தண்ணீர்தானும் உட்கொள்வதில்லையாம். எந்த நேரமுஞ் சோர்வில்லாமையும் முகச் சந்தோஷமும் ஊக்கமுடைமையும் இவரிடத்தே காணத்தக்கன. சமய சாத்திர ஆராய்ச்சி செய்வதும் தம்மிடம் வருவோர் கேட்குங் கேள்விகளுக்கு விடை சொல்வதும் தவிர, ஏனைய காலங்களில் எல்லாம் யோக சாதனஞ் செய்தபடியே காணப்படுவர். குழந்தைகள் எங்ஙனம் கவலையற்றனவாய்க் காணப்படுகின்றனவோ அங்ஙனமே இவரும் எவ்வகையான கவலையும் இன்றி மனசாம்பியத்துடன் காணப்படுகின்றாராம். இவருக்கு மலசல உபாதியோ கிடையாது. தம்முடைய வீட்டு வேலைகளையும் கிரமமாக ஊக்கத்துடன் செய்து வருகின்றாராம். இவர் சிலகாலம் அமரிக்காவிற் சென்றிருந்து இப்பொழுது தான் தமது சென்ம பூமிக்கு மீண்டுள்ளார். சில தினங்கட்கு முன்னர் கோவிந்த பிரசாத் சிங்க என்பவர் சபைத்தலைவராகவிருப்ப இந்த யோகினியார் பிராணயாமம் யோகம் என்னுமிவைகளைப் பற்றி ஒரு அற்புதமான பிரசங்கஞ் செய்தனராம். அவைத்தலைமை வகித்த கோவிந்த பிரசாத்சிங்க என்பவர் குறிப்புரை சொல்லு மிடத்தில், ஒரு அமரிக்க பெண் தனது யோக சாதனத்தால் 10 வருடகாலம் அன்னாகாரமின்றி இருப்பது மாத்திரம் தமக்குத் தெரியுமென்றும் இப்படி 56 வருட காலமாக உபவாசமிருப்பவரெனத் தாம் நேரிற் கண்டது இந்த உத்தமி ஒருவரைத்தானென்றும் கூறி ஆச்சரியப் பட்டாராம்.

இலக்குமணர் 14 வருட காலம் அன்னாகார மில்லா திருந்தாரென இராமாயணத்திற் சொல்லப் பட்டிருப்பதிற் சந்தேகப்படும் சில மக்கள் அந்த இலக்குமணரைப்போல் சரியாக நான்குமடங்கு வருடகாலம் அன்னாகாரமில்லாது வாழும் இந்த யோகினியைப்பற்றி யாது கூறுவாரோ அறியேம்!

நியாயதுரந்தரை அடித்த வழக்கு

எதிரிக்குக் கடுங்காவல் தண்டனை

எதிரி கோட்டிற்கூறிய சாக்ஷியம்

சென்றகிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் இருபாலையில் வசிக்கும் எம். இரத்தினசிங்கம் என்னும் நியாயதுரந்தரக்கு அவ்வூரில் வசிக்கும் அவருடைய சொந்தக்காரராகிய என். அருளம்பலம் என்பவர் சென்ற 25-4-36 ல் அவருடைய (நியாயதுரந்தாருடைய)சேதாரிரோட்டில் இருக்கும் கந்தோருக்கு எதிரில் சென்று நியாயதுரந்தரரை வெளியே அழைத்ததும் நியாயதுரந்தார் வெளியே சென்றதும் எதிரி ஒர் குறுந்தடிகொண்டு தாக்கினார். நியாயதுரந்தார் முதலாம் அடியை இடது கையால் தடுத்ததும் எதிரி திரும்பவும் 3, 4 முறை அடித்தார். அப்பொழுது நியாயதுரந்தாருடைய கந்தோரில் நியாயதுரந்தார் டபின்யூ செல்லத்துரையும் கிளார்க் கனகசபையும் இருந்தனர்.

எதிரி இப்படிச்செய்ததற்கு நியாயம் எதுவும் தெரியவில்லை. எதிரி சட்டவிரோதமாக வீட்டுக்குள் வந்ததாகவும் மரியாதையீனப்படுத்தியதாகவும் நோக்கமாக அடித்ததாகவும் எதிரி மீது குற்றஞ்சாட்டித் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக திரு. சபாபதியும் எதிரி சார்பாக திரு. யோசேப்பும் திரு. சின்னத்துரையும் வாதித்தனர்.

(1) செல்லத்துரையின் சாட்சியம் விசாரிக்கப்பட்ட பின் எதிரி விசாரிக்கப்பட்டார்.

எதிரி கூறியதாவது:—

நான் எனது தாயாருடன் வசிக்கிறேன். தகப்பனார் இறந்துவிட்டார். எனது தகப்பனாற் பராமரிக்கப்பட்ட இருபாலையிலுள்ள பிள்ளையார் கோயிலொன்றுண்டு. இப்போது என் தாயாரே அதைநடத்தி வருகின்றார் இந் நியாயதுரந்தாரின் தூண்டுதலால் சிலர் அக்கோவிலுக்கு வரும் பூசகர்களையெல்லாம் தூஷித்தும் அவர்களுக்குத்தொந்தரவுகளைக் கொடுத்தும் வந்தனர். நான் நியாயதுரந்தாருக்கு ரூபா 50 கொடுத்திருந்தேன். அதில் 2ரூபாவை வாங்கிவிட்டேன். இச்சம்பவத்தன்று மிகுதிப்பணத்தை வாங்க வந்தேன். நான் விறாந்தையில் போய்க் கதவு வாசலில் நின்று அவரை வருமபடி தலையால் அசைத்துச் சாடைகாட்டிக் கூப்பிட்டேன். அவர் வந்ததும் காசைக் கேட்டேன். அவர் "என்ன காசு" என்று சொல்லித் தள்ளி அடித்தார். உடனே நான் பக்கத்தே கிடந்த சிறிய தடியொன்றை எடுத்து ஒரு அடி அடித்தேன். அவர் என்னைக் கட்டிப்பிடிக்க கிளார்க் கனகசபை ஓடிவந்து ஓர் நாற்காலியால் அடித்தார். இந்த நேரத்தில் எனது கைலேஞ்சித் துண்டு கீழே விழுந்தது இத்துண்டால் எனது கைகளைக்கட்டி என்னை உள்ளுக்குத் தள்ளினார்கள். நான் நடந்தசம்பவத்தைப் பொலிசாருக்குச் சொன்னேன்

விசாரணை முடிந்த பின் எதிரியை நீதிபதி குற்றவாளியெனக் கண்டு 1ம் குற்றச்சாட்டிற்கு 1 மாதமும் ம் குற்றச்சாட்டிற்கு 3 மாதமும் ழியமெனவும் இரண்டும் ஏககாலத்தில் அனுபவிக்கப்படும் என்று தீர்ப்புக் கூறினார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

47 - ம் ஆண்டு நிறைவுவிழா

நிகழும் தாது ஆண்டு ஆனித்திங்கள் 7-ம் நாள் (20-6-36) சனிக்கிழமை பிற்பகல் 4½மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மேற் சபையின் 47 - ம் ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்படும்.

அவ்வமயம் அங்கத்தவர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளப் படுகின்றனர்.

க. ஆ. கந்தப்பசேகரம்
கௌரவ காரியதரிசி

வண்ணார்பண்ணை.
5-6-36

நிகழ்ச்சி முறை.

1. தேவாரம்
2. சென்ற ஆண்டுக் கூட்டவரலாறு
3. வருடாந்த அறிக்கையும் வரவுசெலவுக் கணக்கும்
4. புதிய ஆண்டின் உத்தியோகத்தர் தெரிவு
5. தேவாரம்.
6. சிற்றுண்டி

குறிப்பு:—

அங்கத்தவர்கள் தங்கள் சந்தாப் பணத்தைக் கொடுக்குமாறும் வேண்டிக்கொள்ளப் படுகின்றனர்.



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந் தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஹ
வைகாசி மீ உசுவ திங்கட்கிழமை

வடமாகாணப் பரிபாலனம்—1935

II

நமது மாகாணத் தலைவர் தமது அறிக்கையில் யாழ்ப்பாணத்தின் புகையிலைச் செய்கை புகையிலை வியாபாரம் சுருட்டுத்தொழில் என்னும் இவைகளைப்பற்றி வரைந்திருப்பது பெரிதும் அவதானிக்கற்பாலதாகும்.

"நீடித்த காலமாக யாழ்ப்பாணத்தில் விசேஷ விவசாயத் தொழிலாகவிருந்ததும் பணவருவாய்க்கு ஏதுவாயிருந்ததுமாகிய புகையிலைச் செய்கைக்கு இப்பொழுது பொல்லாத காலம் நேர்ந்து விட்டது. யாழ்ப்பாணப் புகையிலை யாழ்ப்பாணச் சுருட்டுகளுக்கு இருந்த மானம் போய்விட்டது. புகையிலைத் தோட்டஞ் செய்தோர் இட்ட முதலுக்கும் பட்ட சிரமத்திற்கும் போதிய ஊதியங் கிடைக்கவில்லை; குடி புகையிலை இங்குள்ள சுருட்டு முதலாளிமாரால் வாங்கப் பட்டுவந்தது; ஆனால் இக்காலத்தில் அந்நியநாட்டிலிருந்து வரும் "சிகரத்" "பீடி" சுருட்டு என்னுமிவைகள் காரணமாக யாழ்ப்பாணத்துச் சுருட்டு அதிகஞ் செலவழிவதில்லை. தின் புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டு வந்தது. அங்கே அதன் மானக் குறைத்துவிட இங்குள்ளார் நஷ்டமடைதலாயினர். ஆனால் இப்பொழுது யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை வியாபார சங்கத்தார் இந்த விஷயத்திற் பிரவேசித்து மலையாளத்தில் யாழ்ப்பாணத்துத் தின் புகையிலைக்குச் சிறிது மானத்தை ஏற்றி வருகிறார்கள்....... வெள்ளை பர்லிப்புகையிலைச் செய்கை இங்கே அதிகம் வாய்க்கவில்லை. லண்டன் நகரில் இது செலவாகாமையால் அதிக புகையிலை குறைந்த விலைக்குவிற்க வேண்டி ஏற்பட்டது......."

யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கை வியாபாரம் சுருட்டு வியாபாரம் என்னுமிவைகளைப் பழைய நல்ல நிலைமையில் வைக்கவேண்டுமானால் அரசினர் இங்கே ஒரு சிறந்த சுருட்டுத் தொழிற்சாலையை முன் மாதிரியாகத் தாபித்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிலாளர் சங்கமும ஏற்பட்டு நடைபெறுகின்றது. இதனால் அடையக்கூடிய பயனை இன்னுஞ் சிலகாலம் இருந்து பார்க்க வேணடும்.

யாழ்ப்பாணத்திலே செய்யப்படும் ஏனைய கைத்தொழிற் பொருள்கள் பிரதானமாக பனங்கட்டி, ஸோடா லெமனேட், பனையோலைப் பெட்டி பாய் சடகம், கயிறு முதலியவைகளெனவும் இவைகளெல்லாம் உள்ளூருக்குப் போதியனவே யல்லாமல் வெளியூருக்கு ஏற்றி வியாபாரஞ்செய்தற்குப் போதியனவல்ல வெனவும் வடமாகாணத் தலைவர் தெரிவிக்கின்றார். பனங்கட்டி வியாபாரம் முன்னொருகாலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு - இவர்களுள்ளும் விசேஷமாக வடமராட்சிப்பகுதியிலுள்ளார்க்குப் பெரும் பொருள் வரவுக்கு ஏதுவாயிருந்தது யாழ்ப்பாணப் பனங்கட்டி உள்ளூர்த் தேவைகண்டு எஞ்சியவை திருக்கோணமலை மட்டக்களப்பு அநுராசபுரம் குருநாக்கல் கண்டி, காலி, மாத்தளை, கம்பளை, நாவலப்பிட்டி முதலாமிடங்கட்கும் தென்னிந்தியாவிற்கும் அனுப்பப்பட்டு வந்தது ஆனால் என்றைக்கு இந்த மதுபரிபாலன முறையுங் கட்டுப்பாடுகளும் ஏற்பட்டனவோ அன்று தொடக்கம் இற்றைவரையில் இந்த அரிய பனங்கட்டி வியாபாரங் குன்றத் தலைப்படலாயிற்று. பனங்கட்டி வியாபாரத்தைக் கெடுத்தவர்கள் அரசினரேயாவர்; பெட்டி பாய் கடகம் கயிறு ஆகிய இவைகளின் வியாபாரம் இப்பொழுதும் ஒரு அளவிற்கு நடைபெற்று வருகிறது. பன்னவேலை பிரதானமாகச் செய்யப்படும் இடங்கள் வடமராட்சியும் தீவுப்பகுதியுமேயாகும். மலிந்த யப்பான் பாய்கள் வந்தபின் இங்குள்ள பாய்க்கு மானங் குறையலாயிற்று. இந்த விஷயமாக, கைத்தொழில் விருத்தி வியாபாரக் 'கமிஷன'ராகிய மிஸ்ரர் டலஸ் சிரமம்பூண்டு வருகிறார். சங்கு வியாபாரம் முந்திய ஆண்டிற் சாட்டிலும் 35-ம் ஆண்டில் தொகை அதிகமென மாகாணத்தலைவர் தெரிவிக்கின்றார். 1934ம் ஆண்டில் குளித்து ஏற்றப்பட்ட சங்கின் தொகை 1017406 ஆகும். 35ம் ஆண்டில் ஏற்றப் பட்ட தொகை 1236202 ஆகும்

யாழ்ப்பாணத்திலே ஒரு பெரிய கைத்தொழில் தோன்று தொட்டு நடைபெற்று வருகின்றது. ஆனால் அதனைப்பற்றி இந்த மாகாணத்தலைவராய் முந்தியிருந்தவர்கள் இப்பொழுது இருப்பவர்களாயினும் ஏதுங் குறிப்பு எழுதியதில்லையாம். காரணம் என்ன என்பது தெரியவில்லை. நாம் சொல்லும் முயற்சி என்னவெனிற் கிடுகாகும். இக் கிடுகுபின்னும் முயற்சி தென்மராட்சியிலுள்ளார்க்கே விசேஷமாக உரியதேனினும் யாழ்ப்பாணம் முழுவதும் கிடுகு வியாபாரம் நடைபெறுகின்றது. இங்கே செலவாகுங் கிடுகிற்கு ஒரு அளவில்லையெனலாம். நமது வடமாகாண ஏஜன்டர் அடுத்த ஆண்டு அறிக்கைப் பத்திரத்திலாயினும் இதனைப் பற்றி ஆராய்ந்து குறிப்பெழுதுவரேல் நன்மை உண்டாம்.

சுகாதாரம் வைத்தியம் என்னும் இவைகளைப்பற்றியும் மாகாணத் தலைவர் சில குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தவருட் பெரும்பாலினர் கைக்கொள்ளும் வைத்தியம் சுதேசவைத்தியமே யாதலாலும், அச் சுதேசவைத்தியத்தைப் பற்றியும் வைத்தியர்களைப் பற்றியும் இந்த அறிக்கைப் பத்திரத்தில் யாதுஞ் சொல்லப்படாமையினாலும் அந்த விஷயத்தில் மாகாணத் தலைவருடைய அறிக்கை நட்பமற்றதென ஒதுக்கிவிடுகின்றேம்.

இனி, யாழ்ப்பாணத்திலே யுள்ள கைத்தொழிற் பாடசாலை ஒன்றேயொன்று தானென்றும் இந்தப் பாடசாலையை அபிமானிப்பாரில்லாமையினால் இது விருத்தியின்றிக் கிடக்கின்றதென்றும் நமது மாகாணத் தலைவர் அநுதாபப்படுகின்றார். கைத்தொழிற் பாடசாலை இங்கே அபிமானிக்கப் படுதலின்றிக் கிடப்பதற்குக் காரணம் அந்தப் பாடசாலையை வைத்து நடத்தும் முறையே அல்லாலாமல்; காரணர் இப்பாடசாலையின் அதிகாரிகளேயல்லாமல் யாழ்ப்பாண மக்கள் அதற்கு ஒருவாற்றானும் காரணரல்லரென்பதை மாகாணத் தலைவர் விளங்கிக் கொள்வது நன்றும். எங்ஙனமெனில் எடுத்துக் காட்டுதும். இந்தக் கைத்தொழிற் பாடசாலையில் கொல்வேலை தச்சுவேலை பன்னவேலை சில சமையங்களில் துணிநெசவுவேலை என்னும் இவைகளே ஆரம்பத்திற் பயிற்றப்பட்டு வந்தன. இப்படியான வேலைகளை யாழ்ப்பாணத்திலே குறித்த குறித்த சாதியினர் செய்வதல்லாமல் ஏனைய சாதியினர் செய்வது தங்கட்குக் கௌரவக் குறைவாகு மென்ற கொள்கையுண்டு. அச்சாதிப் பிள்ளைகள் அவ்வேலைகளைத் தங்கள் தங்கள் வீடுகளிலே பொருட்செலவும் சிரமமுமில்லாமல் இலகுவாகவும் திறமையோடும் பயின்று கொள்ளுதல் முடியும் பெற்றாருக்கு அவர்கள் தொழிலிலேயே அப்பிள்ளைகள் உதவியாகவிருத்தலுங்கூடும். இங்ஙனமெல்லாமிருத்தலினால் குறித்த பிள்ளைகள் கைத்தொழிற் சாலையிற் சேர்ந்துபடிக்க வேண்டிய ஏது ஏற்படாதல்லவா?

இப்பொழுது இலங்கையின் பல பாகங்களில் நெருப்புப் பெட்டித் தொழில் நடைபெறுகின்றது; சவர்க்காரஞ் செய்யப்படுகின்றது. இப்படியான பயன்றரக்கூடிய முயற்சிகளை இக் கைத் தொழிற்பாடசாலையிற் பயிற்றுகின்றார்களா? இச் சாலையில் இன்னின்ன நூதனமான தொழில்கள் பயிற்றப்படும், சேர விரும்புவோர் சேரலாகும் என்று காலத்திற்குக் காலம் ஏதும் விளம்பரங்களைப் பரப்பிப் பிள்ளைகளை அங்கே இழுக்க முயல்கின்றார்களா? இவைகள்எவையுங் கிடையா. இக் கைத்தொழிற்சாலை வாயிலாக அதிகாரிகள் ஏதும் நன்மை செய்ய வேண்டுமென உண்மையாக விரும்புவரேல், இதனை ஒரு தொழிற்சாலையாக்கி நெருப்புப் பெட்டி காகிதம் என்னும் இப்படிப் பட்ட பொருள்களை அரசினர் முதலிட்டுச் செய்யத் தொடங்கினால், இங்கு இக்காலத்தில் ஆங்கிலம் படித்து விட்டுத் தொழின்முயற்சியில்லாது சும்மா திரியும் பிள்ளைகள் ஆயிரக் கணக்கானோர், அத்தொழிற்சாலைக்கு விரைந்து போய் ஏதும் முயற்சி பழக முயலுவார்கள். கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானேவரும் என்பது பழமொழியல்லவா?

அராபியர்—யூதர் தகராறு

பாலஸ்தீனத்தில் நடைபெறும் அராபியர் யூதர் தகராறு பிரிட்டிஷாரது இராஜ நீதியையும் நீதியின்மையையும் உலகிற்கு வெள்ளிடை மலைபோல எடுத்துக் காட்டப் போகின்றது. பாலஸ்தீனத்தின் தலைநகராகிய எருசலேம் பல மதத்தவர்க்கும் புண்ணிய ஸ்தலமாக விளங்கும் ஒரு திருநகராகும். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் யூதர்கள் ஆகிய பல மதத்தினரும் அங்கு தெரிசனத்திற்குச் செல்கின்றனர். இந்நகர் 1244 - ம ஆண்டு தொடக்கமாக முஸ்லிம்களாது ஆதிக்கத்திலும், 1527 - ம் ஆண்டு தொடக்கமாகத் துருக்கியின் ஆதிக்கத்திலும் இருந்துவந்தது. ஐரோப்பிய மகாயுத்தத்தின் பின் ஏற்பட்ட சர்வதேச சங்க உடன்படிக்கையின் பிரகாரம் அது பிரிட்டிஷாரது நிர்வாகத்தின் கீழ் வரலாயிற்று. 1917 - ம ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பல்பூர் அறிக்கை, பாலஸ்தீனத்தை யூதர்களுக்குத் தாய் நாடாகச் செய்து விடுவதாகப் பகிரங்கப்படுத்திற்று. இதன் பலனாகப் பிற நாடுகளில் அவ்வந் நாட்டாரால் உபத்திரவிக்கப்பட்டு வரும் யூதர்கள் பாலஸ்தீனத்தைப் புகலிடமாகக் கொண்டமையே அங்கு இப்போது ஏற்பட்டுள்ள தகராற்றிற்கு முக்கிய காரணமாகும்.

எவ்வளவு விரைவாக யூதர்கள் அந்நாட்டிற் குடியேறுகின்றனரோ அவ்வளவுக்கு அங்குள்ள அராபியருக்கு ஆத்திரம் அதிகரித்து வருகின்றது. பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தை நிர்வகிக்கும் உரிமையைப் பெற்ற ஆண்டு 1922 ஆகும். இவ்வாண்டில் பாலஸ்தீனத்தில் வசித்த யூதரின்தொகை 83,000. சென்ற வருடக் கடைசியிலவர்கள் தொகை 3,75.000 ஆக அதிகரித்திருக்கிறது. யூதர்கள் அங்கு அதிகமாகக் குடியேறினது மாத்திரமன்றி அங்கு நிலங்களையும் அதிகமாக வாங்கி, கிலியாகப் பணத்தையும் இடலாயினர். இவ்வாறே சென்ற ஆண்டில் அவர்கள் ஏறக்குறைய 2,50,00,000 பவுண்களை அங்கு இட்டு வைத்திருக்கின்றனர் என்று கணக்கெடுக்கப் பட்டது. யூதர்கள் பணக்காரர்கள். வர்த்தக சம்பந்தமான முயற்சிகளில் மகா சாமர்த்துள்ளவர்கள். பெரிய இடங்களில் ஆதரவு பெறக்கூடியவர்கள். ஆகவே அவர்கள் இவ்வாறு பெருந்தொகையினராக வந்து குடியேறுவதால் பாலஸ்தீனம் தமது தாய்நாடாக இருந்த நிலைமை மாறிவிடுதல் கூடுமென்று அராபியர் அஞ்சுகின்றனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தாரது நடவடிக்கைகளும் அவர்கள் அச்சத்தை அதிகரிக்கச் செய்யக் கூடியனவாகவே இருக்கின்றன. ஆயின் யூதர்களோ பிற நாடுகளில் ஏனையோர் தம்மை அடுக்காமல் உபத்திரவிக்க, பாலஸ்தீனம் ஒன்றே தமக்குப் புகலிடமாக இருக்கின்றது எனக் கருதுகின்றனர்.

இவ்வாறு இவ்விரு சாதியாரும் ஒருவர்மீதொருவர் கொண்டுள்ள அவநம்பிக்கையும் அச்சமுங் காரணமாக, அங்கு பிரிட்டிஷார் ஒரு சட்டசபையை நிறுவ முயற்சித்த போது அராபியர் அதிற் பங்குபற்ற மறுத்தனர். ஆயின் சென்ற ஆண்டு சட்டசபையைப் பற்றிய விஷயம் மீண்டும் எடுத்துக் கொள்ளப் பட்டபோது அராபியர் இரு காரணங்கள் பற்றி அதனை அங்கீகரித்தனர். ஒன்று, யூதர் அதனை வெறுத்தமையால் அதில் தமக்கு ஏதோ நன்மை இருக்கிறது என அவர்கள் கொண்ட நம்பிக்கையாகும். மற்றது, நிர்வகிப்போருக்கு விசேஷஅதிகாரம் அல்லது பாதுகாப்பு இல்லாமையால், அச்சபையிற் பெருந் தொகையினராகிய தாம விரும்பியவாறு வாக்களித்து விஷயங்களைப் பூர்த்தியாக்கலாம் எனவும், யூதர்கள் குடியேற்றத்தைப் பற்றியும் அவ்வாறே தாம் கட்டுப்பாடு செய்து கொள்ளலாம என்றும் அவர்கள கருதலாயினர்.

இயல்பாகவே இத்தகைய ஒரு சட்டசபையால் தாம் பாலஸ்தீனத்தைத் தாய் நாடாகக்கொள்ளக் கருதியமை வெறும் பேய்த்தேராகவே முடியும் எனக் கண்ட யூதர்கள் அதனை விரும்பிற்றிலர்.

ஆயின், சமீபத்தில் இவர்களுக்கிடையே தகராற்றை அதிகரித்தமைக்குக் கம்மன்ஸ் சபையிற் பாலஸ்தீனத்தில் சட்டசபை ஏற்படுவது சம்பந்தமான விவாதம் நடைபெறுங்கால், யூதர்களுக்கு அதிக ஆதரவு காட்டப் பெற்றமையே முக்கிய காரணமாகும். பாலஸ்தீனத்திற் சட்டசபை நிறுவுதல் சம்பந்தமாகத் தமபக்க நியாயத்தை எடுத்துக் காட்டுதற்காக அராபியர் இங்கிலாந்துக்கு ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்ப எண்ணியிருந்தனர். ஆயின், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் யூதர்கள் மீது பாரபக்ஷமாக நடந்து வருகிறார்கள் என்பதை அவதானித்ததும் அவர்கள் அங்கு தூதுக் கோஷ்டியை அனுப்புவதை நிறுத்தி விட்டார்கள். அங்கு அமைதியின்மை நிலவிவருகின்றது.

இதுவேயுமன்றி, ட்ரான்ஸ்ஜோர்டன், இராக், சிரியா, எகிப்து, ஆதியாம் அயல்நாடுகளாகிய அராபியநாடுகளுக்கு பார்லிமென்ட் ஆட்சிமுறை அளிக்கப் பெற்றிருக்கின்றது. அந்நாட்டினர்க்கு எவ்வாற்றானும் குறைவில்லாததாம அவ்ஆட்சிமுறை அளிக்கப் பெறுமைபற்றியும் பாலஸ்தீனத்திலுள்ள அராபியர் அதிருப்தி கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந் நிலைமையைச் சீர்ப்படுத்துவது எளிதல்ல. இதிலிருந்து பிரிட்டிஷாரது அரசநீதி எத்தகையது என்பது உலகினர்க்கு நன்குதெரியவருமென்பது நிச்சயம். நிலைமை இவ்வாறாக, அதனைப் பரிகரிப்பதற்கு வழிதேடுவதை விடுத்து, "வேலைநிறுத்தத்திற்கோ, பலாத்காரத்திற்கோ நாம் அஞ்சோம். சர்வதேச சங்கத்தின் சார்பாக நமக்குள்ள பொறுப்பை நிறைவேற்றிவைத்தே தீருவோம்" என்று பாலஸ்தீன ஹை கமிஷனர் கொக்கரிக்கின்றார். இவர் கொக்கரிப்பன்றோ கொக்கரிப்பு!

பருந்தின் வீழ்ச்சி

நமது பருந்து ஆகாயத்தில் நின்று வட்டமிட்டுக்கொண்டே நிற்கும். எங்காவது தனக்குப் புதினமாகிய சிற்றுணவு அல்லது கோழிக்குஞ்சு தட்டுப்படுமேல் உடனே ஒரு வீழ்ச்சியாக வீழ்ந்து இறுஞ்சிக்கொண்டு வந்துவிடும் வீழுந்தால் கை போடு மீள்வதன்றி வாளா மீள்வது அதன் வழக்கமல்ல. ஆனால் அது எந்தஇடத்தில் வீழுமென்று அதற்கு வரையறை கிடையாது. எங்கு அதற்கு இரை தென்படுமோ அங்கு அது சர்ரென்று குதித்து உணவை எடுத்துக் கொண்டு மீளவும் ஆகாயத்திற்குத் திரும்பிவிடும் என்பது மாத்திரம் நிச்சயம்.

* * *

வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த நமது பருந்தின் பார்வை திடீரென்று இங்கிலாந்துநோக்கிச் சென்று கொண்டிருந்த நமது மாஜி அபிஸீனிய சக்கரவர்த்தியின் மீது விழுந்தது. பட்டத்தாசனத்தில் விளங்கிய சக்கரவர்த்தி இப்போது கட்டத் தனியனாகப் பிறரது தயவை வேண்டி வேற்று நாடு செல்வதைக் காணப் பருந்தின் மனம் சிறிது கரைந்து வந்தது. இதனால் அவர் ஜிப்ரோல்டரை அடையும் சமையத்தில் நமது பருந்தும் உடனே அங்கு குதித்தது. சக்கரவர்த்தியார் என்ன சொல்லுகிறார் என்பதை மிக்க கருத்துச் செலுத்திக் கேட்கலாயிற்று. "சட்டரீதியாக அபிஸீனிய உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமாகவே நான் இங்கிலாந்து செல்லுகின்றேன்" என்று சக்கரவர்த்தி, யாரோ தம்மைப் பேட்டிகண்ட ஒருவருக்குக் கூறியது நமது பருந்தின் செவிகளில் வீழ்ந்தது. பருந்து இரக்கமிகுதியால் ஒரு பெருமூச்சு விட்டது. ஐயோ! பாவம். இந்த மன்னர்க்கு மன்னன் வாளாநம்பி அலையப்போகின்றாரே. சட்டரீதியாகவாவது நீதியை எடுத்துப்போதித்தாவது அபிஸீனியாவின் உரிமைகளைக் காக்க முடியாதென்பதை இவர் ஏனோ இன்னும் அறிந்திலர். மயிலே! மயிலே! இறகு கொடு என்றால் மயில் இறகு கொடுக்குமா? பற்றிய நாட்டை விட்டுவிடென்றால் முஸோலினி விட்டுவிடுவாரா? அபிஸீனியாவை மீட்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இத்தலியோடுபோராடுவதேஅவ்வழி ஆகும். நமதுசக்கரவர்த்தியார் பிரான்ஸிலும இங்கிலாந்திலுமே அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார். ஐயோ! பாவம். இவ்விரு நாடுகளும் யுத்தமென்றால் "செத்தோம் பிழைத்தோம்" என்று ஓடும் நிலைமையில் இருக்கின்றன. இதனையறியாமல் இச் சக்கரவர்த்தி ஏமாறப்போகிறாரே" என்று தன்னுள் பிரலாபிக்கலாயிற்று. பின் அறிவு தலைக்கூட, விதியை வெல்வார் எவரும் இல்லை. நடப்பது நடக்கட்டும். இவ்வளவுதூரம் வந்த சக்கரவர்த்தியாரும் போய்க் கடைசிவரையும் தம்மாலானவற்றைப் பார்க்கட்டும். நடப்பதைப் பொறுமையாகப் பார்ப்போம் என்று மனதைத் தேறிக்கொண்டு சக்கரவர்த்தியாரைக் குழப்பாமல் மீளவும் வானத்தை யடைந்துவிட்டது.

* * *

வானத்தை அடைந்து மீளவும் வழக்கம்போல நாற்றிசையும் நோக்கிய கண்ணோடு வட்டமிட்டுக் கொண்டிருந்த நமது பருந்துக்கு கிழக்கே ஜப்பானுக்கும் சீன தேசத்திற்குமிடையே ஒரு யுத்தம் மூளுவது தென்பட்டது. உடனே ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்தது. அது அறிந்து வந்த செய்திகள் பல. அவற்றை இங்கு கூறவே இடங்கிடையாது. ஆகவே ஒரு சிலவற்றை மாத்திரம் தெரிவிக்கின்றேன். ஜப்பான் விஸ்தீரணத்தில் சிறியது; ஜனத்தொகையில் பெரியது; விடாமுயற்சியில் மிகவும் சிறந்தது; ஓயாத உழைப்புக்குத் தாயகமாக உள்ளது; இப்படி ஒரு நாடு இருக்கின்றதோ என்று கூட உலகினர் பொருட்படுத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

காரைதீவில் தற்கொலை

காரிகை வீட்டின் முகட்டிற் கயிறு கட்டிச் சுருக்கிட்டு இறந்தாளாம்.

சென்ற வெள்ளிக்கிழமையன்று நாவற்குழி ஸ்டேஷனில் கிளாக்கு வேலைபார்க்கும் ஒருவரது மனைவி தான் வசிக்கும் ஊராகிய காரைநகரில் தனது இல்லத்தில் தற்கொலை புரிந்து கொண்டாள் என்னும் துக்கச் செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. இத் தற்கொலைக்கு வீட்டில் நடந்த ஏதோ அதிருப்தியே காரணம் எனத் தெரியவருகிறது. இது காரணமாக அப்பெண், தனது பிள்ளைகளை ஏதோ வேலையாக வெளியே அனுப்பிவிட்டு வீட்டின் முகட்டிற் கயிற்றைத் தொங்கவிட்டுத் தனது கழுத்திற் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டாளென்று கூறப்படுகிறது.

புகையிலைத் திருட்டு

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பூநகரி-மட்டுவில் நாட்டிலிருக்கும் சங்கரப்பிள்ளை ஆறுமுகம் என்பவருடைய தோட்டத்திலுள்ள புகையிலையை வெட்டிக் களவாக எடுத்துச் சென்றதாக அவ்வூரில் வசிக்கும் (1) சரவணமுத்து (2) திருமலர் (3) துரைச்சாமி 4) சின்னப்பிள்ளை (5) சின்னம்மா ஆகியவர்கள் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

சங்கரப்பிள்ளை ஆறுமுகம் கூறியதாவது:—

பாவக்குளப்பிட்டி என்னும் காணி என்னுடையது. அதில் நான் கூலியாட்களைக் கொண்டு புகையிலைக் கன்று நடுவித்தேன். அங்கு திருமலர் என்பவனும் ஓர் வேலைக்காரனாக நின்று வேலை செய்தான். அவனுக்கு மாதம் 15 ரூபா சம்பளம் கொடுத்தேன். அவன் சென்ற 5 வருஷங்களாக என்னுடன்தான் இருந்தான். சென்ற 30-ம் திகதி இரவு எனது தோட்டத்தில் நான் இல்லாத நேரத்தில் 80 ரூபா பெறுமதியுள்ள புகையிலையை வெட்டித் திருமலரும் மற்றையவர்களுமாக எடுத்துச் சென்றதாக (1) வைரத்தினமும் (2) கிருஷ்ணரும் எனக்கு அறிவித்தனர். நான் இச் சமபவம் நடக்கும்போது கொழும்புத்துறையில் நின்றேன். வழக்கு வருகிற 12-6-36க்குத் தவணையிடப்பட்டது.

பருந்தின் வீழ்ச்சி

4ம் பக்கத் தொடர்ச்சி.

தக் கூடாத அத்தனை அற்பஸ்திதியிலிருந்த ஜப்பான் இப்போது மிக்க வன்மையோடு கூடிய முதற்றர வல்லரசாக மாறிவிட்டது. அற்பனுக்குப் பவிசு வந்தால் என்ன செய்வான் என்றதெரியுந்தானே. ருஷிய-ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பான் அடைந்த வெற்றி அதற்கு முன்னரே இருந்த தலைக்கனத்தோடு இன்னும் அதிகமான கனத்தை உண்டாக்கி விட்டது. இத்தலிக்குப் பிடித்த யுத்தவெறி ஜப்பானுக்கும் தொற்றிவிட்டது போலத் தெரிகிறது. இவ்வாறு தனது திமிரைப் போக்க இடம் பார்த்துக் கொண்டு நின்ற ஜப்பானுக்கு சிறிது இளைத்த நிலைமையிலுள்ள சீனா தென்படலாயிற்று. இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் விடுவானா? அது போல, ஜப்பானும் தனது திமிரைப் போக்கச் சீனாவோடு சிறிது உரோஞ்ச ஆரம்பித்தது.

சீனவும் ஜப்பானும் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன. சீனா தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று சர்வதேச சங்கத்தை மன்றாடிக் கேட்டுக் கொண்டது. எனினும் அச்சங்கம் அதற்கு இசையவில்லை. பஞ்சுகோவை ஜப்பான் விழுங்கி விட்டது. மஞ்சுகோவைச் சுயேச்சையாக விட்டுவிடுவதாகவும் அது சூழ்ச்சியாகப் பகிரங்கப்படுத்திற்று. இம்மட்டோடு நிற்கவில்லை. வடசீனாவிற் புகுந்தது. அப்பகுதிகளைச் சீனாவிலிருந்து பிரித்து விட வழிதேடிற்று. சில மாகாணங்கள் ஜப்பானது சூழ்ச்சியை அறியாமல், அது கூறியபடி நடக்க ஆரம்பித்தன. ஜப்பானுக்கு விரோதமானவர்களை அங்கு வைத்திருக்கக் கூடாதென்று அது பீதியை ஏற்படுத்திற்று. தனித்துக் கொண்ட மாகாணங்களில் தனது செல்வாக்கை வலுப்படுத்திற்று. அம்முயற்சியின் ஒரு பகுதியாக ஒரு படையை அங்கு அனுப்பிற்று. வழியில் றெயிற் பாதையில் சில சீனர்கள் வெடிகுண்டுகளை வைத்துத் தகர்த்து விட்டார்கள் இதுவே இப்போது அங்குள்ள நெருக்கடியான நிலைமைக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது.

அவசியமாயின், ஜப்பானோடு எதிர்த்து நின்று போர்புரிவதற்குச் சீனப்படை தயாராகவும் இருக்கிறதாம்.

இந்நிலைமையில் சக்தியற்ற சர்வதேசசங்கம் இதிலாயினும் தனது கடமையைச் சரிவரச் செய்யப்போகின்றதா அல்லது தனது கௌரவத்திற்குச் சாவுமணி அடிக்கப்போகின்றதா? என்று கேட்டுவிட்டு நமது பருந்து ஓரே பாய்ச்சலில் மீண்டுவிட்டது. யுத்தம் என்றால் நமது பருந்துக்கும் உள்ளுக்குள்ளே சிறிது பயந்தான். ஆனால், மரியாதைக்காக அது தனது அச்சத்தை அதிகமாக வெளியிலே காட்டிக்கொள்ளவில்லை. புறமுதுகிட்டோடாத சுத்த வீரன்போல அது சப்பாஷித்துக் கொள்ளும். ஆகவே அது தாக்கலை அறிந்துகொண்டு மரியாதையாகத் திரும்பிவிட்டது

* * *

திரும்பிய பருந்து மீண்டும் இரைதேட ஆரம்பித்தது. இம்முறை இதன் கருத்து இலங்கைத்தீவில் நடைபெறும் ஒரு சிறு சம்பவத்தின் மீது சென்றது. அதென்னவோயாவெனில், இலங்கை மோட்டார்ச் சங்கத்தின் வேண்டுகோளின்படி சமீபத்தில் ஒரு மகாநாடு நடைபெறுமாம். இம் மகாநாட்டில் மோட்டார்க் கார்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளைப்பற்றி மீண்டும் ஆலோசனை நடைபெறுமாம். இவ்விஷயம் சம்பந்தமாக மோட்டார்ப் பதிவுகாரருக்குப் பல விண்ணப்பங்கள் போயிருக்கின்றனவாம். நமது பருந்தும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் தானும் ஒரு விண்ணப்பத்தை அனுப்பிவிட்டு வந்திருக்கிறது. அவ் விண்ணப்பம் சுருக்கமானதுதான். அது வருமாறு:—

மேன்மை தங்கிய ரிஜிஸ்ட்ரார் அவர்களே! மோட்டார்க்கார்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகள் அவசியம் உபயோகிக்கப்படவேண்டும். இலங்கையில் மணி ஒன்றுக்கு இத்தனை மைலுக்கு அதிகமாக ஓடக் கூடாதென்ற பிரமாணத்தை ஏற்படுத்தி, அப்பிரமாணத்திற்கு அதிகமாகக் கார்களை ஓட முடியாதபடி வேகத்தடைக் கருவிகளை வைத்தே தீரவேண்டும் என்பது எனது கருத்து. பம்பாய் முதலிய நகரங்களிளெல்லாம் இம்முறை கையாளப்பட்டு வருகின்றது. இதனால் பல விபத்துக்கள் கிசமுதொழியும். இலங்கையில் மலைப் பிரதேசங்களில் இக்கட்டுப்பாடு வைக்காவிட்டாலும் யாழ்ப்பாணம் போன்ற சமதரைப் பூமிகளில் இக்கட்டுப்பாடு வைத்தல் தக்கதேயாகும். தாங்கள் இதை அவசியம் செய்தே தீரவேண்டும். இதென்ன! பறவைதானே என்று எனது வார்த்தையை அலக்ஷியம் செய்துவிடக் கூடாது. நமஸ்காரம், போய் வருகிறேன்.

இங்ஙனம
தங்கள் பராக்கிரமத்தை
கண்டறிந்த பருந்து.

* * *

மேலும் இரைக்காகப் பருந்து வட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. வேண்டுவோர் அதற்கு நேரே எழுதி விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். அதன் விலாசம் வருமாறு:—

ஸ்ரீலஸ்ரீ கருடராஜன்,
வானபுரம்,
மண்ணுலகு.

“நான் தப்பி ஓடிய விதம்”

களவெடு பொய் சொல்லாதே

பேர்போன திருடனாகிய கிறின் அப்பு என்பவன் கொழும்பு டிஸ்திரிக் நீதிஸ்தலத்தில் இருமறியற் சேவகருக்குத் தப்பி, ஓடும் புகைரதத்தினின்றும் குதித்து ஓடினான் என்ற குற்றச் சாட்டில் விளங்கப்பட்டபோது தான் ஓடிய விதத்தைப் பின்வருமாறு சொன்னான்:-

“நான் பதுளையிலிருந்து நுவரெலியா டிஸ்திரிக்கோட்டுக்கு வந்தபோது 2 வருடச் சிறை விதிக்கப்பட்டேன் என்பது மெய்; தீர்ப்பு சொல்லப்பட்டபோது பின்னேரம் 3½ அல்லது 4 மணிவரையிலிருக்கும்; என்னைச் சேவகர்கள் பிடித்துக் கொண்டு போய் நுவரெலியாப் பொலிஸ்தானத்தில் ஒரு அறையுள் அடைத்தார்கள்; அன்றிரவு 7½ மணிவரையில் 2 சேவகர்கள் அறையைத் திறந்து என்னை வெளியே நடத்திக் கொண்டு போனார்கள்; இப்போது புகைவண்டி ஒன்றும் புறப்படுகிற நேரமல்லவே, என்னை எங்கே கொண்டு போகிறீர்கள் என்று அத்தச் சேவகரைக் கேட்டேன்; “ஏ! பொத்து வாய்; அதெல்லாம் நீ கேட்க வேண்டியதில்லை; எங்கே நாங்கள் வரச் சொன்னாலும் அங்கெல்லாம் நீ வரத்தான் வேணும்” என்று சேவகருள் ஒருவனாகிய சபஸ்டின் அசட்டிச் சொன்னான்; நுவரெலியாவிலிருந்து கனுஓயாவரையில் நாங்கள் மூன்றுபேரும் நடந்தே போனோம்; அங்குள்ள ஒரு கடையிலே எனக்கு விரோதமாகச் சாட்சி சொன்ன பொலிஸ், தலைமைக்காரன், இன்னும் இரண்டு மூன்று பேர் இருப்பக் கண்டேன்; அவர்களெல்லாருங் கூடி என்னைப் பரிகாசஞ் செய்யத் தொடங்கினார்கள்; நான் அவர்களை வைதேன்; அதுகண்டு பஜிட் என்னும் சேவகன் என்னைத் தெருவுக்கு இழுத்துக் கொண்டு போக, சப்ஸடின் அவர்களுடனே பேசிக் கொண்டு கடையிலேயே இருந்தான்; கொஞ்சநேரஞ் செல்லக் கடையிலிருந்த அத்தனை பேரும் நான் நின்ற இடத்திற்கு வந்தார்கள்; அங்கே நின்ற பொலிசருள் ஒருவன் என் தலையில் அடித்தான்; “ஏ, கைவிலங்கோடு நிற்கிற எனக்கு நீ அடிக்கிறது ஒரு செட்டித்தனமல்ல, விலங்கைக் கழற்றிவிட்டால் என் செட்டித்தனத்தை உனக்கும் காட்டி வைப்பேன் என்று சொன்னேன்; என்னை அடித்த பொலிஸ் அதைக் கேட்டுப் பெரிய ஆத்திரங்கொண்டு கண்டபடி என்னை வைது, சபஸ்டினைப் பார்த்து “இவனுடைய விலங்கை ஒருக்கால் கழற்றிவிடு இவன் என்ன செய்கிறான் பார்ப்போம்' என்றான். சப்ஸடின் என் கைவிலங்கைக் கழற்றத்தொடங்க, நான் ஏன் கழற்றுகிறாய் என்று அவனைக்கேட்க, கழற்றிவிட்டால் நீ வசதியாய் அப்பம் தின்னலாம் என்றான். நான் இப்போது சாப்பிடவில்லை இன்னும் நேரமிருக்கிறது. புகைவண்டியிற் போகும்போது சாப்பிடலாமென்றேன். அவன் அதைக் கேளாமல் என் கைவிலங்கைக் கழற்றித் தன்னுடைய சட்டைப் பைக்குள் இட்டுவிட்டு புகைரத ஸ்தானத்தில் மலகூடமிருக்கும் இடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோனான். அங்கே அந்தப் பொலிசர் இருவரும் நிற்கக் கண்டு, அவர்கள் என்னை அடிக்கப் போகின்றார்களென்று பயந்து நான் சடுதியில் ஓட்டம் பிடித்தேன். தலவாக்கொல்லைப் புகைரதப் பாதை வழியே ஓடிப்போனேன்; துரையே! இதுதான் நான் தப்பின வரலாறு மேலும் அன்று இவர்கள் என் கைவிலங்கைக் கழற்றாமலிருந்தால் நான் தப்பியோடியிருக்கமாட்டேன்”

விசாரணையின்பின் நீதிபதி கிறின் அப்புவுக்கு இந்த வழக்கில் 1 வருஷக் கடுங்காவல் விதித்தார்.

சாவகச்சேரிப் புகைரத விபத்து

சாவகச்சேரி நீதிஸ்தலத்தில் விசாரணை

டிரைவர் கூறிய சாக்ஷியம்

[நமது நிருபர்]

ஜூன், 5உ

சாவகச்சேரிப் புகைரத விபத்தைப்பற்றி இன்று மாலை 5 மணிக்கு சாவகச்சேரி நீதிஸ்தலத்தில் மறுபடியும் விசாரணை செய்யப்பட்டது. அப்போது உதவிப் போக்குவரத்துச் சூப்பிரண்டன் திரு. எச். வி. ஷொக்மனும் சமுகமாயிருந்தனர். விசாரணையின் போது சாரதி பி. எஸ். விக்கிரமரத்ன கூறியதாவது:—

நான் புகைரதஸ்தான மேடையுள் காலை 9. 20 மணிக்கு வண்டியைக் கொண்டு வந்தபோது அர்னேலின் பிழையான இடத்தில் நின்று சிவப்புக் கொடியைப் பிடித்தார். அதனால் நான் லூப் லைனுக்கு வெகு தூரத்தில் எஞ்ஜினை நிறுத்தி விட்டேன். ஸ்தானத்துக்குக் கிட்ட வந்தவுடன் எனது வண்டி போக வேண்டிய இடத்திற்குப் பாதை திறந்து விடப்பட்டிருந்ததைக் கண்டேன். அப்போது சின்ன வண்டி வருவதையும் கண்டேன். அர்னேலின் சிவப்புக் கொடியை எனக்குக் காட்டினர். சின்ன வண்டி அவருக்குப் 15 யாருக்கப்பால் மத்திமமான வேகத்துடன்வந்தது. அவ் வண்டி மணிக்கு 10 மைல் வேகத்தில் வந்திருக்குமானால் விபத்து நடந்த இடத்துக்கு 10 யாருக்கப்பால் வண்டியை நிறுத்தியிருக்கலாம். நான் காலக் குறிப்புப் புத்தகத்தில் வண்டி வந்த நேரத்தைக் குறித்துக் கொண்டிருக்கும் போது சத்தியநாதன் ஐயோ! ஐயோ!! காட்டுரை என்று கத்தினன். நான் உடனே எழுந்தேன். இதற்கிடையில் விபத்து நேர்ந்து விட்டது. காலஞ் சென்றவர் எனது வண்டியில் தான் வேலை செய்தார். அவர் சிறிது தூரத்திற்கு முன் சின்ன வண்டியில் சில பெட்டிகளைப் பிரித்துவிட வேண்டுமென்று கூறினர். பின்னர் வெளியே சென்று விட்டார். வழக்கமாகச் சின்னவண்டி வந்தபின்னர்தான் பெட்டிகளைப் பிரித்து இணைப்பது.

சின்னக் கோச்சியிலிருந்த ஜூனியர் கார்ட் ஜி. சங்கரய்யர் கூறிய சாட்சியமாவது:-

புகைரதஸ்தானத்துக்குக் கிட்ட வண்டி வந்ததும் கைகாட்டியைப் பார்த்தபோது அது சாய்ந்திருந்தது. சந்தியில் நின்றவர் பச்சைக் கொடியைக்காட்டினர். வண்டி ஸ்தானத்திற்குள் நுழைந்ததும் நான் வெளியே எட்டிப்பார்த்தேன், அவ்வமயம்தான் எஞ்ஜின் சாமான் வண்டிகளுடன் மோதியிருப்பதைக் கண்டேன். நான் நிலைகலங்கி விட்டேன். உடனே சந்திகளைப் பரிசோதித்துப் பார்த்தபோது மூன்றுவது சந்தி “குட்ஷெட்” பாதைக்குத் திறக்கப்பட்டிருந்தது. பூட்டுக் கீழே கிடந்தது. இதை அதிகாரிகளுக்கு அறிவித்தேன். எனது வண்டியில் வந்தவர்களுக்குக் காயம் ஏற்படவில்லை. திரு. எஸ். கணபதிச்செட்டியார் கூறியதாவது:- நான் காலை 9 மணிக்கு வெங்காயமூடை எடுப்பதற்குப் புகைரதஸ்தானத்துக்குச் சென்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு நின்றேன். அப்போது அர்னேலின் அவருடைய மேசையிலிருந்த திறப்பை எடுத்துக் கொண்டு விரைவாக ஓடினர். நான் மூடைகளை வண்டியில் ஏற்றியபோது தான் விபத்து நடந்த சப்தம் எனக்குக் கேட்டது.

பின்னர் நீதிபதி வைத்திய அதிகாரி டக்டர் வி. டி. பசுபதி அவர்களை விசாரணை செய்தபின் தீர்ப்பை 16ந் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இத்தாலிய - எகிப்து ஒப்பந்தம்

பிரிட்டனுக் கெதிராக இத்தலியர் விஷமப் பிரசாரம்

ரக்பி, 1

“ஆக்ஸ்போர்டு” கப்பலில் மாஜி அபிஸீனிய மன்னர் நேற்று லண்டனுக்குப் பயணமானார். புறப்படுவதற்குமுன்னர் தம்மை உபசரித்துக் கௌரவப்படுத்திய ஜிப்ரால்டர் அதிகாரிகளுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்.

லண்டன் 1

பாலஸ்தீனத்திலும் எகிப்திலும் இத்தாலியர்கள் பிரிட்டனுக்கு விரோதமாக விஷமப் பிரசாரம் செய்துவருகின்றார்களென்றும், இது காரணமாகவே பாலஸ்தீனத்தில் கலகம் ஏற்பட்டதென்றும் “டைம்ஸ்” பத்திரிகையின் “கெய்ரோ” நிருபர் கூறுகின்றார். எகிப்தில் இத்தாலியர்களின் பிரசாரத்தால் பிரயோஜனமொன்றும் ஏற்படவில்லை. எகிப்தில் ஏராளமான இத்தாலியர்கள் வசித்து வருகின்றார்கள். அவர்கள் அபிஸீனியா வீழ்ச்சியுறுமென்பதை முன்னதாகவே அறிந்துகொண்டார்கள். இத்தாலியர்கள் இரக்கமின்றி அபிஸீனியாவில் விஷப்புகையைப் பிரயோகித்ததால் எகிப்தியர் கோபமடையவில்லை. அவர்கள் இரக்கமற்ற இத்தாலியர்களுடன் தாங்களும் போர்செய்ய வேண்டியநேற்படுமோ என்று பயப்படுகின்றார்கள். இத்தாலிய சர்க்கார் எகிப்துடன் ஓர் யுத்த மறுப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளுவார்கள். சூயஸ்கால்வாயில் பிரிட்டிஷ் துருப்புக்கள் இஷ்டப்போல் போக்குவரத்துச் செய்வதை ஆக்ஷேபிக்கும் நோக்கத்துடனேயே இத்தாலிய சர்க்கார் யுத்தமறுப்பு ஒப்பந்தம் செய்துகொள்வார்கள்.

விவாகம்

சென்றவியாழக்கிழமை (4-6-36) இரவு 10 மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வண்ணார்பண்ணை மேற்கு டக்டர் M. வெற்றிவேலு அவர்களின் கனிஷ்ட புத்திரனும் ஐக்கிய நாணயசங்கப் பரிசோதகருள் ஒருவருமாகிய ஸ்ரீ நடராஜாவுக்கும், இலங்கைப் புகைரதப்பகுதியில் உத்தியோகமாகவிருந்த திருநெல்வேலி ஸ்ரீ நா. சின்னத்துரையவர்களின் புத்திரி ஸ்ரீமதி மகேசுவரியம்மாளுக்கும் மணமகளில்லமாகிய புஷ்பமாளிகையில் நூற்றுக்கணக்கான சுற்றமித்திரர் சமுகத்தில் விவாகம் வேதசிறப்புடன் நிறைவேறியது. மணமகனில்லத்தும் மணமகளில்லத்தும் அடுத்த அடுத்த தினங்களிலும் உபசாரணைக்கொண்டாட்டம் நடைபெற்றது. மணமக்கள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையுள்ளது)

விசேட மகாசபை

இந்த ஆனிமீ 27உ சனிக்கிழமை சாயுங்காலம் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி றேட்டிலுள்ள இச்சங்கத்துக் கந்தோர் 'மகாமண்டப'த்திலே ஒருவிசேட மகாசபைக் கூட்டம் நடைபெறும்.

விஷயம்

30-9-35ல் நடைபெற்ற இச்சங்கத்து 17ம் வருடாந்தக் கூட்டத்தில் இச்சங்கப் பிரமாணங்களுள் வேண்டிய திருத்தங்கள் செய்தற்காக நியமிக்கப்பட்ட உபசபையார் செய்துள்ள திருத்தங்களையும் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளுதல்.

S. V. இராசசேகரம்,
அக்டிங் காரியதரிசி.

(Mis. 50. 8-6-36 to 15-6-36.)

ஹரிலால்காந்தியின் மதமாற்றம்

மகனது மதமாற்றம் பற்றிக் காந்திஜீ கருத்து

"சுயநலமின்றியாவது உண்மையார்வத்துடனாவது அவன் மதம்மாறியிருப்பானென்பது சந்தேகமே"

பங்களூர், ஜூன் 2—

ஸ்ரீமான் ஹீராலால் காந்தி இஸ்லாம் மதத்தைத் தழுவியது பற்றி 'என் பல்லாயிரம் முஸ்லீம் நண்பர்களுக்கு' என்ற மகுடமிட்டு மகாத்மா கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்திருக்கிறார்:—

சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்பு எனது குமாரன் ஹரிலால் காந்தி இஸ்லாம் மதத்தைத் தழுவியதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. அவனுக்கு இப்போது வயது ஐம்பது. மே 29-ந்தேதி ஜும்மா மசூதியில் ஒரு பெரும் கூட்டத்திடையில் அவன் தன்னுடைய மதமாற்றத்தை யறிவிக்க அனுமதிக்கப்பட்டானாம். கரகோஷங்களுக்கிடையே அவன் பேசி முடிந்தபோது ஜனங்கள் அவனுடன் கைகுலுக்கச் சென்றார்களாம். உலக ஆசையின்றி உண்மை ஆர்வத்தால் அவன் மதம்மாறியிருந்தால் எனக்கு ஆக்ஷேபமில்லை. என் மதத்தைப்போலவே இஸ்லாம் மதமும் உண்மையானதென்பது என்னுடைய கருத்து. சுயநலமின்றியாவது, உண்மையார்வத்துடனாவது அவன் மதம்மாறியிருப்பானென்பது எனக்குச் சந்தேகமாக விருக்கிறது

"அன்னங்கைப் பரஞ்சோதி வித்தியாசாலைத் திறப்புவிழா"

மேன்மை தங்கிய சைவவித்தியா விருத்திச் சங்கத்தாரால் புதிதாகத் தொடக்கப்பெற்ற பாடசாலைகளுள் இதுவுமொன்றாகும். இப்பாடசாலை சென்ற ஐப்பசிமீ தொடக்கம் இற்றைவரை அன்னங்கைச் சிவன் கோவிலுக்கு(பூசாரியார்கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஒரு பொது மண்டபத்தில் நடைபெற்று வந்தது. தற்போது ஐஞ்ஞூற்றுக் கதிகமான பிள்ளைகள் படிக்கக்கூடிய ஓர்பாரிய கட்டிடத்தை ஷை சங்கமும் உபமனேஜரும் கோண்டாவிலைச் சேர்ந்த அன்னங்கையில் அமைத்தனர். இப்பாடசாலைத் திறப்புவிழாவின்போது ஷை சங்கப் பாடசாலைகளின் மனேஜர் திரு. சு. இராசரத்தினமவர்களை இது வரை பாடசாலை நடந்துவந்த பொது மண்டபத்திலிருந்து அன்னங்கை விஷவைத்தியர் சிவப்பர் என வழங்கப்பெற்ற இளையதம்பியின் மருகரும் ஷை பாடசாலையின் உபமனேஜரும் ஆகிய சி. கார்த்திகேச பிள்ளையவர்கள் மாலையிட்டு மேளவாத்தியத்துடன் அழைத்துச் சென்றனர். சனத்திரள் ஏராளமாகக் காணப்பட்டது. ஷை புதுப்பாடசாலைக்குச் சென்றதும் பூசைநடாத்தப்பட்டது.

கூட்டத்திற்குச் ஸ்ரீமான். இராசரத்தினமவர்கள் தலைமை வகித்தனர். பாடசாலைப் பெண் பிள்ளைகளால் சங்கீத முறைப்படி வந்தனப் பாக்களும் கீர்த்தனங்களும் பாடப்பெற்றன, ஆசிரியர்களால் வாழ்த்துப் பாக்கள் படித்தலும் நன்றி உபசாரப் பத்திரம் படித்தலும் நடத்தப் பெற்றன. அவைத்தலைவரும் பாடசாலைத் தலைமை யாசிரியரும் பெருமையிற் சிறந்த மகாதேவசுவாமி யவர்களும் சைவப் பாடசாலையின் அவசியதைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர். சபையில் மகிழ்ச்சியுடன் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இததுடன் கூட்டம் மங்களகரமாக நிறைவெய்தியது.

—கடித

நீங்கள் ஒரு சிறு காரை வாங்கும்போது
பின்வரும் குறிப்புக்களை அவதானியுங்கள்

ஆஸ்டின்
செவினில்

1. 4 ஸ்பீட் கியர் பொக்ஸும் 3 ஸ்பீட்ஸ் சிங்கரமேஷும் உண்டு
2. ஸ்பேயர்வீலும் லக்கேஜ் கரியரும் உண்டு
3. அபாயமின்றிக் காரைச் செலுத்தக்கூடியவிதமாகத் தானாக இயங்கும் ரிட்டேன் டிரெக்ஷன் இண்டிக்கேட்டர்ஸ் உண்டு
4. குரோமியம் பிளேட்டுள்ள டி-அன் சுவிச்ஹெட்லாம்ஸும் ஸ்டொப் லைட்டும் உண்டு
5. ஒளிபொருந்திய இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் உண்டு
6. கீழ்த்தரை லெவல் உண்டு
7. செலவுச் சுருக்கத்திற்கேற்ற பாரக்குறைவு உண்டு

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட்
கொழும்பு.



நீங்கள் ஆஸ்டின் காருக்குக் கொடுக்கும் பணம்
பழுதற்ற பணமாகும்

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம்
ஆகிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி றோட்டு, யாழ்ப்பாணம்.

Y137. 19-8-35. — 18-8-36.

நமது நாட்டை வாட்டும் பேய்கள்

நமது நாட்டின் க்ஷீணதிசைக்கு எத்தனையோ காரணங்களிருக்கின்றனவென்றாலும் அதில் முக்கியமானவை காப்பி தேயிலை, மதுபானம், நாடகம், சினிமா என்பனவைகளே யாகும். சுமார் 30 வருடங்களுக்கு முன் இத்தகைய கொடிய பழக்கமாகிய காப்பி குடித்தல் அதிகமிராதென்றே கூறலாம். அந்தக் காலத்தில் 100க்கு ஒருவர் காப்பி குடித்து வந்தனர். இக்காலத்திலோ 100க்கு 99 பேர் வரை காப்பி தேயிலை பருகும் வழக்கமுடையயராய் விட்டனர். காப்பி குடிக்கத் தலைப்பட்டபின்னரே உணவுப் பொருள்கள் விலையேறிவிட்டதென்றால் எவரும் ஒப்புக்கொள்வர். காப்பிக் கிளப்புகள் ஏற்பட்ட பின்னர்ச் சுத்தமான உணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை அரிசியும் மற்றுமுள்ள வஸ்துக்களும் மலிவு என்பதிலிருந்து விலகிக் கிராக்கி யென்னும் பதத்திற்குத் தலைமை பெற்றுவிட்டது. இதனால் பால் தயிர் நெய் முதலியனவும் கிடைப்பதரிதாய்விட்டது நகரங்களில் தான் இவ்விதமோவெனில் நாட்டுப்புறங்களிலும் கூட இவ்விதமேயேற்பட்டுவிட்டது. இது மிக்க விசனத்திற்குரியதன்றோ? பழையது என்ற பெயரே மறைந்துவிட்டது காலையிலெழுந்ததும் காப்பி சாப்பிடவேண்டும் என்கின்றார்களேயொழிய பழையது சாப்பிடவேண்டுமென்பவர்களைக் காணக் கிடைக்கவில்லை. நமது நாட்டில் ஏழைகள் மலிந்து துன்பசாகரத்தி லழுந்திப் பசியும் பட்டினியுமாய் வாடுவதற்கு முக்கியகாரணங்கள் இவையென்றால் நம் மொழியை எவரும் இகழ்ந்து கூறார்களென்றே எண்ணுகிறேன். காப்பி தேயிலையினால் மேல்நாட்டவர்கள் பணக்காரர்களாகின்றார்களேயொழிய நாம் தேகவலிமை குன்றி வறுமையை யடைகின்றோமென்பது திண்ணம். நிற்க மதுபானமும் நமது நாட்டை வறுமைபாக்குவதில் முக்கியமான தொன்றென்றே கூறலாம். மதுபானத்தினால் நமது நாட்டில் நடக்கும் கொலை, களவு, கலகங்களுக்கோர் கணக்கில்லை. மதுபானமுண்டு மதிமயங்கிச் சோம்பித் திரிகின்றனர் சிலர். மதுபானத்தினால் நமது நாடு வறுமையடைகின்றதெனபது ஒருதலையே. மதுபானம் என்னும் பேய் வறுமை யென்னும் தேவதையின் வாகனமாகி நம் நாட்டவர்களை வருத்துவதினால் அதையும் அறவே யொழித்துவிட்டாலன்றி க்ஷேமம் ஏற்படாது.

மேற்கூறிய காரணங்களொருபுறமிருக்க, நாடகங்கள் ஒருபுறம் தலையெடுத்து நவீன நாகரீக முறையில் நடிப்பினை யற்றதாகவுமிருக்கிறது தீய ஒழுக்கங்களுக்கு ஆஸ்பதமானதாகவுமிருக்கிறது. நாடகமானது மனதை வசிகரப்படுத்தும் தன்மையதாகவிருக்கவேண்டுமென்பது மேலோர் கொள்கையாயிருந்ததை யொட்டியே அக்காலத்தில் சமயவிஷயங்களையும் பக்தர்களின் சரிதங்களையும் நடித்துக்காட்டி ஜனங்களை நல்வழிப்படுத்தப் பிரதி ராஜாக்களாலும் ஏற்பாடாகியிருந்ததோடு சந்தோஷமான காரியங்களையும் முடிப்பதற்கு ஹேதுவாகவும் ஏற்படுத்தப்பட்டு எவரும் கட்டணமின்றியே காண ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. தற்காலத்திலோவெனின் தொழில் முறையில் நடத்தப்படுவதுடன் பொருள் பறிக்கும் நிலைமையிலும் வந்துவிட்டது. இத்துடன் சினிமா என்னும் சலனக்காக்ஷிகள் அதிகமலிந்துபோனதுடன் பார்ப்பவர்களின் கண்ணொளிகளையும் பாழாக்குகின்றன. இக்காக்ஷிகளைப் பார்ப்பவர்கள் தங்கள் திரவியங்களையும் செலவழித்துத் தேகத்திற்குச் சுகவீனத்தையும் தேடிக்கொள்கின்றனர். இன்னும் விரிக்கிற் பெருகுமென வஞ்சி விடுக்குதும்.

நமது நாடு க்ஷேமமெய்தவேண்டுமாயின் நம்மவர்கள் காப்பி, தேயிலை, மதுபானம், குடித்தலையும் நாடகம் சினிமா பார்ப்பதையும் அறவே யொழிக்கவேண்டும், நண்பர்கள் வார்த்தை யளவில் கொள்ளாமல் செய்கையிலும் இதைக்கொண்டு துஷ்கிருத்தியமான மேற் கூறியவைகளை யொழித்து நமது நாட்டை க்ஷேமமடையச் செய்யவேண்டும் விடுதலைபெறச் செய்ய வேண்டும். செல்வம் பெருகச்செய்ய வேண்டுமென்பதே யெனது பேரவா.

இங்ஙனம்,
சண்முகநாதசர்மா
கொழும்புத்துறை
கிழக்கு 4-6-36

காந்திஜீ பிரசங்கங்களின் சாரம்.

ஹரிஜனங்களுக்குச் சமவுரிமை

"ஹரிஜனங்கள் ஹிந்து சமுகத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்படும்வரை நமக்குள் மனஅமைதியே கிடையாது"

நந்திமலை மே 31

மகாத்மாகாந்தி, ஸ்ரீமதி காந்தி பிரிஜ்லால் நேரு சர்தார் வல்லபாய்பட்டேல், ஸ்ரீ காகா கலேல்கார், ஸ்ரீ மகாதேவ தேசாய் முதலியோர் இன்று காலை 5-30க்குப் பிரார்த்தனை முடிந்தபின் கோலார் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதாக, ஆக்லத்திலிருந்து புறப்பட்டனர்.

புறப்படும் சமயத்தில் பனியுங் குளிரும் அதிகமாக இருந்தும், அவர்களை வழியனுப்ப ஏராளமான பேர் வந்திருந்தனர்.

மகாத்மா காந்தியும், சர்தார் படேலும் நந்திமலையில் 21 நாள் வாசத்தினால் தேகத்தில் ஆரோக்கியம் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

105 மைல் பிரயாணத்தில் 5 இடங்களில் பொதுக் கூட்டங்களில் பேசினர். சிக்பல்லூர், சித்தல் கட்டசிந்தாமணி, கோலார், பௌரிங்பெட ராபர்ட்ஸன்பெட் முதலிய முனிஸிபாலிடிகளிடமிருந்து ரூ1,300வசூலாயிற்று.

மகாத்மாவின் சுற்றுப் பிரயாண சமயத்தில்தான் மைசூர் மகாராஜாவின் ஜனன தினமும். மகாத்மா செய்த பல பிரசங்கங்களிலும் மைசூர் சர்க்காரும் பொது மக்களும் தமக்குக்காட்டியஅன்பைப் பாராட்டி மகாராஜா தீர்க்காயுளாக இருக்க வேண்டும் என்று கூறினர்.

பிரசங்கங்கள் சாராம்சம்.

மகாத்மா காந்தி சுற்றுப் பிரயாணத்தில் செய்த பிரசங்கங்களின் சாராம்சம் வருமாறு:—

ஹிந்துபாஷை அவசியம் பற்றி அவர் கூறியதாவது:—

"சர்வதேச பாஷை என்ற ஹோதாவில் ஆங்கிலத்திற்கு ஒரு திட்டமான ஸ்தானம் இருக்கிறது. ஆனால் இந்திய பொது மக்களின் இதயத்தில் குடி கொண்டிருக்க அதற்கு இடமே கிடையாது"

"இன்று உங்கள் மகாராஜாவின் ஜன்ம தினம். கடவுள் உங்கள் அரசருக்கு நீண்ட ஆயுளைக்கொடுக்க வேண்டும் என்று உங்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கிறேன்"

'சுதேச மன்னர்கள் ஆட்சியைப் பற்றி நான் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். பூர்வகாலத்தில் அவர்களது நிர்வாகத்தை நம்மவர் ராம ராஜ்யத்திற்கு ஒப்பிட்டனர் ராம ராஜ்யத்தில் வறுமை கிடையாது மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். அங்கு உயர்வு தாழ்வு கிடையாது. இந்தியாவின் எல்லா இடங்களிலும் ராம ராஜ்யம் என்ற கொள்கை நடைமுறையில் கொண்டு வரப்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்குச் சமவுரிமை.

"ஹரிஜன நிதிக்கு நீங்கள் பணமுடிப்பு அளித்ததற்குப் பாராட்டுகிறேன். நீங்கள் கொடுத்த பணமுடிப்புச் சிறியதுதான்; ஏனெனில் உங்களால் இதைவிட அதிகமாகக் கொடுக்க முடியும் ஹரிசன இயக்கத்திற்கு எவ்வளவு கொடுத்தாலும் அது நம முன்னோர் பாபத்திற்குத் தருந்த பிராயச்சித்தமாகாது. ஹரிஜனங்கள் ஹிந்து சமுகத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்படும்வரை நமக்குள் மன அமைதியே கிடையாது. இராஜஹிந்துக்களைப்போல் அவர்களும் சம உரிமை பெறவேண்டும், நீங்கள் இவ்வளவு சிறிதளவாவது கொடுத்திருக்கிறோம் என்று மகிழ்ச்சியடைந்தாலும் இதைவிட எவ்வளவோ இயற்றவேண்டும்,என்பதை உணர்ந்திருக்கிறீர்கள். இதில் உங்கள் முயற்சியை இரண்டுமடங்கு அதிகமாக்கி வேலைசெய்யவேண்டும்.

"நீங்கள் யாவரும் ஹரிஜன வேலையில் ஈடுபட்டிருப்பதாகப் பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

கதரும் தீண்டாமையும்

"தீண்டாமை என்ற மறுவை நாம் அகற்றாவிட்டால் ஹிந்துசமூகம் அடியோடு நாசமாகிவிடும். தீண்டாமை நாட்டில் எவ்விதரூபத்திலும் இருக்கும்வரை நாம் ஏதும் இயற்றிவிட்டதாகக் கூறிக்கொள்ள முடியாது. மைசூர் சமஸ்தானத்தில் மாத்திரமாவது பொது மக்கள் கதரையும் சுதேசிப் பொருள்களையும் அதிகமாக உபயோகிக்கின்றனர். என்று இந்தியாவின் மற்றப்பகுதிகளில் கூறவேண்டும் என்று ஆசைப்படுகிறேன் நீங்கள் கதர் இயக்கத்தைப் பலவீனப் படுத்துவதற்கு நியாயமே இல்லை. இங்கு கதர் அபிவிருத்தி சர்க்கார் உதவிபெற்ற ஸ்தாபனம். இரண்டாவதாகக்கதருக்காகச் செலவிடப்படும் நாட்டின்ஏழைகளுக்காகச் செலவிடப்படுகிறது.

ஆகாயவிமான ஒழுங்கு

அதிகாரிகள் யோசனை

இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கிடையே ஸெப்பலின் விமான சர்வீஸ் ஒன்று வழியில் எங்கும் தங்காமல் ஏற்படுத்தலாமென்று தெரிகிறது. லண்டன் ஆஸ்திரேலியா விமானப் போக்குவரத்தைத் துரிதப்படுத்துவது சம்பந்தமாக மேற்படி விஷயத்தைக் குறித்து அதிகாரிகள் யோசித்து வருவதாகத் தெரிகிறது. அடுத்த வருஷம் விமான நிலைய ஸ்தலங்களை மேற்பார்வையிடும் கோஷ்டியொன்று இலங்கைக்கு விஜயம் செய்து, கொழும்பு காலி முதலியவிடங்களைப் பார்த்துவிட்டுச் செல்லுமென்றும் தெரிகிறது.

1923-ம் வருஷம் விமான நிபுணர்கள் சிலர் கொழும்பிற்கு விஜயம் செய்தது அவர்களுடைய விசாரணை முடிவுகளும் கவனிக்கப்படும். ஸெப்பலின் சர்வீஸ் ஏற்படுத்தப்படுமென்று நிச்சயமாகக் கூறமுடியாது. ஏனெனில் ஹாலந்திற்கும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் இடையே ஸெப்பலின் சர்வீஸ் ஒன்றை ஏற்படுத்த டச்சுக்காரர்கள் யோசித்து வருகின்றனர். அது ஏற்படுத்தப்பட்டால் புதிய ஸெப்பலின் சர்வீஸ் அவசியமில்லை.

"அது குற்றமல்ல"

பஸ் தங்குமிடமல்லா இடத்தில் தங்கினார்கள் என்று 21 பஸ் சாரதிகளுக்கு விரோதமாக களுத்துறைப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் பொலிசார் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள். பஸ்காரர் பக்கமாக ஏற்பட்ட நியாயவாதி விசாரணையின்போது, குறித்த பஸ்காரர் தங்கிய இடம் புத்தகோவிலோடுகூடிய ஒரு அரசமரத்திற்கு முன்பாகு மென்றும், அங்குள்ள உண்டியற் பெட்டியில் காணிக்கை இடுவதற்காகவே பஸ்களை அவர்கள் அந்த இடத்தில் நிறுத்தினார்களென்றும் நீதிபதிக்குச் சொல்ல, நீதிபதி அப்படியானால் அது குற்றமல்லவென்று சாரதிகளை விடுதலைசெய்து இப்படியான வியாச்சியங்களைப் பொலிசார் இங்கே வந்து தொடர்ந்து எங்கள் நேரத்தை வீணாக்கக் கூடாதென்று தெரிவித்தாராம.

உலகம் போற்றும் உத்தமர் நபி(ஸல்)அவர்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பணிந்தனர். தேசங்களை அவர்கள் வென்றதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் வென்ற தேசங்களில் ஏற்படுத்தின அரசியல் சீர்திருத்தமானது அவர்களின்வழித்தோன்றியோரால் வணக்கமின்றிப் புறக்கணிக்கப்பட்டபோதிலும் பதின்மூன்று நூற்றாண்டுகளாய் நின்று நிலவுகின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து உலகத்து அறந்தோர்களில் மிகப் பெரியோர்களையும் உலகை வென்றவர்களில் தலை சிறந்தோரையும் விளங்கினார். அவர்கள் பரப்பிய கல்வியின் அருளின் இன்றைக்கும் இவ்வுலகம் சுகிஜெயனும் ஒளியினால் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. நபியவர்கள் இருபது வருடத்திற்குள் ஏற்படுத்திய சீர்திருத்தமானது மக்கட் கூட்டத்தாருக்கு வேண்டிய எல்லா நலன்களையும் அடிப்படையாகக் கொண்டதாய்த் திகழ்கின்றது.

உலக சமாதானம்

உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக நபிகள் திலகம் அவர்கள் ஏற்படுத்திய அஸ்திவாரமானது உலகத்திற்கே ஓர் பெரிய அருளாக நின்று விளங்குகின்றது. பல ஜாதிகளுக்கிடையிலும் பல மனிதர்களிடையிலும் மாத்திரம் சமாதானத்தை ஏற்படுத்த அன்னவர் முயற்சிக்கவில்லை. சர்வ விஷயங்களிலும் அதிக கஷ்டமான மத சமாதானத்தை அன்னவர் ஏற்படுத்தினர். மக்கட் சமத்துவத்தைச் சகல மானிடர்க்குமிடையில் நிலை நிறுத்தினர். அன்னவர் தம்மைக் குறித்துக் கூறுகையில் "நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே" என்று பகர்ந்தார். ஆண், பெண், எஜமான் அடிமை, அறிவுடையோன், அறிவீனன், அரசன், குடிமக்கள் என்னும் இவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிருக்கின்றன. பொறுப்புகளுமிருக்கின்றன. மனிதனென்னும் பான்மையின் அவர்களனைவரும் ஒரே வரிசையில் தான் நிற்கின்றனர்.

வருடத்திற்கு ஓர் முறை மக்கா நகரில் கூடும் ஹஜ்ஜு என்னும் வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக இலட்சக்கணக்கான மனிதர்கள் ஒரேமாதிரியான உடுப்பை அணிந்துகொண்டு பெரியோர், சிறியோர், மேலோர், கீழோரென்ற வேறுபாடின்றி, ஓரே பெற்றோரின் பிள்ளைகள்போல் மக்கட் சமத்துவத்தைத் தமது அன்பின் வடிவமான தொழுகையினால் உறுதிப்படுத்துகின்றனர். ஐந்துநேரத் தொழுகைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொருபள்ளிவாயில்களிலும் இச் சமத்துவத்தையே முஸ்லீம்கள் அனுஷ்டிக்கின்றனர். தேசிய சம்பந்தமான உத்தியோகங்களில் "உசாமா" என்னும் அடிமையைத் தளகர்த்தனாக்கிக் குறைஷிகளெல்லோரையும் அவருக்கடிபணிந்து பட்டாளத்தில் சேர்ந்து தேசத்திற்காக யுத்தம் செய்யும்படி செய்தமை போன்ற வரலாறுகள் இஸ்லாமிய சரித்திரத்திற் காணப்படுதல் இவ்வுண்மையை இன்னுமின்னும் வற்புறுத்துகின்றன.

இஸ்லாத்தின் கொள்கை

சர்வ மதங்களுக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும். நபிகள் திலகம் அவர்களின் பேரில் நம்பிக்கை கொள்வதுபோல் உலகத்தில் எந்தெந்த ஜாதியார்க்கிடையில் தீர்க்கதரிசிகள் அனுப்பப்பட்டனரோ அவர்கள் எல்லோர் மீதும் நம்பிக்கை கொள்ளுதல் ஒரு முஸ்லிமின் கடமையாக இருக்கின்றது. சர்வஜனங்களுக்கும் தீர்க்கதரிசிகள் அனுப்பப்பட்டிருக்கின்றார்களென ஓர் முஸ்லீம் மனமார நம்பி அவர்களை மரியாதை செய்வதினால் சர்வ மானிடர்களுக்கும் அவன் சகோதரனாகின்றான். மற்ற ஜாதியார்களின் தீர்க்கதரிசிகளை நம்பாதவன் முஸ்லிமல்ல என்று இஸ்லாமிய மதம் போதிக்கின்றது.

உலகத்தின் சமாதானத்தையும் அன்பையும் சகோதரத்துவத்தையும் ஏக தெய்வக்கொள்கையையும் நிலைநாட்டி வைத்த நபிகள்பிரானின் திருநாளை பாரெல்லாம் களிப்போடும் பயபக்தியோடும் கொண்டாடுவோமாக! நி—ன்

பகலிலும் இரவிலும் பேசலாம்

இம்மாதம் முதலாந்தேதியிலிருந்து இந்தியாவிற்கு இரவிலும் பகலும் டெலிபோன் மூலம் சம்பாஷணை செய்யலாம். கொழும்பைத் தவிர்த்து மற்றப் பகுதிகளில் உள்ள டெலிபோன் கந்தோர்களிலிருந்து இந்தியாவிற்குத் தினம் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரைதான் சம்பாஷணை செய்ய முடியும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் காலை 8 மணியிலிருந்து 10 மணிவரைதான் பேச அனுமதிக்கப்படுவார்கள்.

றெயில் விபத்து

ரங்கூன், ஜூன் 1—

பர்மா ரயில்வே அறிக்கையொன்று கூறுவதாவது:—

மைமிட்கினாவிலிருந்து மாண்டலே சென்று கொண்டிருந்த ஒரு கலப்பு ரயில் வண்டித் தொடர் பக்கான் ஸ்டேஷனுக்கும் வெட்லட் ஸ்டேஷனுக்குமிடையில் தண்டவாளத்தை விட்டகன்றது.

இதனால் எஞ்ஜினும் அதனையடுத்திருந்த பிரேக்வானும் குடைசாய்ந்தன. 2 மூன்றாம் வகுப்பு வண்டிகளும், முதலிரண்டு வகுப்புகளை கொண்டதொரு வண்டியும், ஒரு தபால் வண்டியும் தண்டவாளத்தை விட்டகன்றன.

இந்த விபத்தின் காரணமாக என்ஜினிலிருந்தவர்களும் 2 மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளும் காயமடைந்தனராம். அவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

—அ—பி.

கோடைகாலத்திற் பீடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒரு போத்தல்
லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்
தைலத்தை
வாங்கி வைத்திருங்கள்
இதுவே
இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

பட்டப் பகலிற் தபாற் கொள்ளை

சேவகன் மரத்தோடு கட்டப்பட்டான்

லக்ஷ்மணபுரி, ஜூன் 1

ராய் பேரில்லி ஜில்லாவில் பார்சவான் தபாலாபீஸுக்கும் சிவசார்க் தபாலாபீஸுக்குமிடையில் 5 தபாற் பைகளைத் தூக்கிச் சென்ற சேவகனை அடையாளந் தெரியாத சிலர் பட்டப்பகலில்வழிமறித்து வாயில் துணியை அடைத்து ஒரு மரத்தில் கட்டிவிட்டு தபால் பைகளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்களென இந்த தகவல் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பைகளில் இன்ஷியூர்களுள் கடிதங்களுமிருந்தனவாம். மரத்தில் கட்டப்பட்டிருந்த சேவகனைப் பிறகு வழிப்போக்கர்கள் அவிழ்த்து விட்டார்களாம். வழிப்பறி செய்த திருடர்கள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருகிறார்கள். இச்செய்தி உத்தியோக முறையில் இன்னும் ஊர்ஜிதமாகவில்லை.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் திரிகோணமலை 7ம் நெம்பர் சின்னக்கடைத் தெரு பெரியதம்பி தம்பு செல்வநிருபசம் & முருகுப்பிள்ளை மயில்வாகனம் இராசேந்திரம் என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1935ம் ஆண்டு 1ம் மாசம்

இல.	உ.	ரூ.	ச.	நகைவிபரம்.
A 1194	5	38	04	கழுத்துச்சங்கிலி I
1215	9	7	04	இமிற்றேசன் கல் தோடு 1
1233	12	65	04	கங்கட் கட்டிக் காப்பு சோடி 1
1240	13	7		[illegible] 1
1265	20	8	04	காட் 1
1283	26	12		பின்னற்காப்பு 1
2ம் மாசம்				
1304	2	40		பொன் தாலிக்கொடி 1
1310	4	15		இமிற்றேசன் ஒப்பின் தோடு கூட்டம் 1
1342	12	94	44	பெரிய கிரீடம் 1 சின்ன கிரீடம் 3
3ம் மாசம்				
1421	11	65	04	மினுகாப்பு சோடி 1
1428	11	25	04	செடிவேலை செய்த காட் 1
4ம் மாசம்				
1514	4	10	04	கைவிலங்கு 1
1553	11	20	04	அட்சரக்கூடு 1
1569	13	15		பதக்கம் 1
1 85	18	23	04	பெட்டி மோதிரம் 2
1600	22	8		பெட்டிமோதிரம் 1
1603	22	70		பொன் அச்சரக்கூடு கோத்த சங்கிலி 1
1628	29	35	04	பின்னப்பவுண் காப்பு சோடி 1
5ம் மாசம்				
1660	5	14	04	கலாவரை மோதிரம் I
1673	8	18	04	புரோச் 1
1680	9	18		பின்கோர்த்த பதக்கமுடன் கரிசமணி கோர்வை 1க்கு மணி 20
1687	11	190		சங்கிலித் தாலிக்கொடி 1
1703	14	20		பின் கோர்க்கியுடன் உட்கட்டு தாலித்தட்டு 9
1711	15	50	04	மெழுகுடன் பட்டைக்காப்பு சோடி I
1737	19	55	04	முகப்புடன் பூக்காப்பு 1
1751	21	170		அரைமடலர் 1ம் அரைப்பவுண் 2ம் கோர்த்த கழுத்துச் சங்கிலி 1 பட்டக்காப்பு சோ. 1
1752	21	18	04	கல் கவுத்தோடு 1
1753	21	9		பெட்டிமோதிரம் 1
1776	26	16	04	திர கைச்சங்கிலி 1 கரை இல்லை
1780	26	10	04	குவளைக் கடுக்கன் சோடி 1 கரை இல்லை
1792	30	6	04	வெள்ளிப் பாதசரம் கூட்டம் 1
1797	31	10		இமிற்றேசன் வெள்ளைக்கல் தோடு கூட்டம் 1

விற்பனவு 1936ம் ஆண்டு தாதுவருஷம் ஆனிமாதம் 9ந் திகதிக்குச் சரியான (22-6 36) திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறதிகலாக மீதுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பெர். விசுவநாதஉடையார்,
வெக்றீஸ்மேஸ்தர்,
திரிகோணமலை,
3 6 36.

(Mis, 49. 8 & 11-6-36.)

சைவ பரிபாலன சபை.

1907-ம் ஆண்டில் நிகழ்ந்தவை.

(1-6-36 ன் தொடர்.)

இங்ஙனம் எழுதி இவர் பெயராலும் ஒருபரிசு தாம் இந்துக்கல்லூரிக்களித்த கிட்டங்கிவாடகைப்பணத்திலிருந்து வருஷந்தோறும் கொடுபட்டு வருமாறு செய்துளனார். சண்முகம் இறந்த சில நாட்களுள் அவரைப்போலவே இச்சபையிலும் இந்துக்கல்லூரி திருவாக சபையிலும் ஓர் அங்கத்தவராயிருந்த இரா. அருளம்பலமும் 1907ஆ வைகாசிமீ 9உ மட்டக்களப்புக்கு காணிப் பதிவுகந்தோர்த் தலைவராக உத்தியோக உயர்வு பெற்றுச் சென்றார். இவர் இந்துக் கல்லூரிக்கு ஆற்றிய உதவிகளையெல்லாம் பசுபதிச்செட்டியாரும்பாராட்டி எழுதியிருக்கிறார். அவர் எழுதியது இது:

"R. N. ARULAMBALAM (Head Clerk Provincial Registrar's Office) A Member of the Managing Committee and an ardent & Successful worker in the cause of the College whose timely help at a critical moment was very valuable" என்பனவாக எழுதி இவர் பெயராலும் ஒரு பரிசு தாம் இந்துக்கல்லூரிக்களித்த கிட்டங்கி வாடகைப் பணத்திலிருந்து வருஷந்தோறும் கொடுபட்டு வருமாறு செய்துள்ளார். இது நிற்க,

காட்டுக்கோட்டை வணிகர்குல திலகரும் யாழ்ப்பாணத்திலிருந்த ரா. ம. மெ. சித. கடையின் சொந்தக்காரருமான சிதம்பரம் செட்டியார் இங்கு வந்திருந்தபோது 1907 ஆ ஆடிமீ 20உ இந்துக்கல்லூரி அதிகாரசபையார் அவரைக் கல்லூரிக்கு அழைத்து அதன் வரலாறுகளையும் அப்போது செய்யப்பட வேண்டியதாயிருந்த திருத்தங்களையும் சொல்லி ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். "An address giving the history of the College and detailing its needs was read on the occasion, and the Chettiar was so pleased with the institution that he promised to contribute to its funds and also to use his influence in the interests of the College if endeavours are made to collect Subscriptions in his own country on its behalf" அதைக்கேட்ட செட்டியார் இரண்டாயிரம் ரூபா உபகரித்து இன்னும் இச்சபையார் பணம் சேர்க்க தமவூருக்கு வரநேர்ந்தால் தமது செல்வாக்கை உபயோகித்து சித்தியடையச் செய்வதாயும் கூறினர். இது நிற்க,

மூன்றாவது வருஷாந்தக் கூட்டம்.

இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் மூன்றாவது வருஷாந்தக் கூட்டம் 1907ஆ ஆடிமீ 27உ கூடிற்று. அப்போது அத்துவக்காத்து நாகலிங்கத்தின் கனிஷ்டர் சி. துரையப்பாவும், அத்துவக்காத்து வை. துரைசுவாமியும் இந்துக் கல்லூரி அதிகாரசபையில் அங்கத்தவர்களாகவும், கௌரவ அ. கனகசபை அக்கிராசனாதிபதியாகவும், அ. மயில்வாகனம் J. P., U. P. M. உப அக்கிராசனாதிபதியாகவும், வி. காசிப்பிள்ளை இலேககராகவும், வ. மு. முத்துக்குமாரு உதவி இலேககராகவும், அ. சின்னப்பா தனாதிகாரியாகவும், சி. வை. சின்னப்பாபிள்ளை கணக்குப் பரிசோதகராகவும், இ. கந்தையா, சி. தம்பையாபிள்ளை, அ. சபாபதி, சீ. கந்தையா என்னும் நால்வரும் மற்றைய நிருவாகசபை அங்கத்தவர்களாகவும் தெரிவுசெய்யப்பெற்றார்கள்.

வரவு செலவு.

• 1906ஆ ஆடிமீ 1உ முதல் 07ஆ ஆனிமீ 30உ முடிய வந்த மாணவர் சம்பள வரவு ரூ. 3124 சதம் 01-ம், அரசினர் உதவி நன்கொடைப்பணம் ரூ. 2432-ம், சில்லறையாய் ரூ. 164 சதம் 55ம ஆக ரூ. 5720 சதம் 56 ஆனது. இக்காலத்தில் உபாத்தியாயர் வேதனம் ரூ. 6810 சதம் 32-ம், கல்லூரிக் கட்டடத்தில் ரூ. 207 சதம் 75-ம், சில்லறையாய் ரூ. 125 சதம் 48-ம் ஆனது.

1907-ம் ஆ கார்த்திகை மீ கொழும்பிலிருந்து இங்கு வந்து இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய பல இடங்களில் அரிய பிரசங்கமாரிபொழிந்த ஸ்ரீசந்திரவர்மா இந்துக் கல்லூரி மண்டபத்திலே வேதமார்க்கம் (Vedic Religion) என்னும் விஷயத்தைக் குறித்துப் பேசியபோது, கிறிஸ்து மதம் கிறிஸ்துவினால் கட்டப்பட்டதென்றும், மகமதுசமயம் மகம்மதுவினால் கட்டப்பட்டதென்றும், ஆனால் வேதமதம் அதாவது நமது இந்துமதமோ ஒருவராலும் கட்டப்படாது என்றுமுள்ளதென்றும், அதுவே ஆதிமதமென்றும், வேதத்திற் கூறப்பட்டுள்ள நான்கு ஆச்சிரமங்களை நாம் முறைப்படி கைக்கொண்டொழுகிவந்திருந்தால் நமது சாதியார் இப்பொழுது இவ்வளவு தாழ்வடைந்திருக்க மாட்டார்கள் என்றும், முற்காலத்தில் பிரமசரிய விரதத்தை 23 வயது வரைக்கும் முறைப்படி அநுஷ்டித்து வந்தோர் கிரகஸ்தரானபின் நல்ல திடகாத்திர தேகமுள்ள பிள்ளைகளைப் பெற்றார்கள் என்றும், இப்பொழுதுள்ள வாலிபரோ இளம்பராயத்தில் தம் ஆசையால் தேகவலி குறைந்தவர்களாகின்றமையால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சுபசரீரிகளாயிருக்கவில்லையென்றும், இன்னும் இதுபோன்ற பல குறிப்புக்களை மிக்க சாதுரியத்துடனும் திறமையுடனும் யாவரும் வியக்கத்தக்கவிதமாயெடுத்துக் கூறினர். பின், டிசம்பர்மீ 2உ செய்துள்ள விஞ்ஞாபனம் இது:—

"Thakur KahanChandra Varma's Appeal to The Hindus·

Every Hindu who was present at the meeting held in the Jaffna Hindu College on the 2nd inst. would have been touched by the impassioned appeal which Thakur Kahan Chandra Varma made on behalf of the College. He made mention of the flourishing condition of the national Colleges in the North of India and of the great self-sacrifice which Indians were making on behalf of these institutions. He was exceedingly sorry to find that the building of the Hindu College was not completed. He was still more sorry to hear that the funds of the College were low. He said that the College was a national institution and it was the duty of every Hindu to support it. The rising generation was the hope of the Hindu nation and they could not be properly educated without national colleges. Hindu boys could never be properly trained in Missionary institutions where their religion is ridiculed and where their ancestors and heroes are reviled. The remedy remained with the Hindus themselves. It would be a standing disgrace to the Hindu community of Jaffna if their College were not brought to a high state of efficiency. It must serve as the central educational institution for all the Hindus of Ceylon............................"

இப்பெரியார் நிகழ்த்திய உருக்கமும் வசீகரமுமான சொற்பொழிவைக் கேட்ட அச்சபையிலுள்ளோர் ஆர்வத்தோடும் ஒவ்வோர் தொகை உபகரிப்பதாக வாக்களித்துக் கையொப்ப மிட்டார்கள். அச்சமயம் கையொப்ப மிடப்பட்ட தொகை ஆறாயிரம் ரூபா வரையிலாகும். அதில் 500 ரூபா உபகரிப்பதாக வாக்களித்து அப்படியே உதவியவர் இக்கல்லூரியின் உதவி இலேககராயிருந்த வ. மு. முத்துக்குமாரு ஆவர்.

—(வரும்)

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

கனிஷ்ட பாடசாலை விடுகைத் தாராதரப்பத்திர வகுப்பு (1937) [J.S.C.] இலக்கியக் குறிப்பு.

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல்நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

1937-ம் ஆண்டு ஆங்கில J. S. C. வகுப்பிற் பயிலும் மாணவருக்கும் ஆவசியகம் வேண்டியது. விலை சதம் 80.

செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.

விலை சதம் 75

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.
Mis 12. 13-4-36.) தி வண்ணார்பண்ணை.

வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)
2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்ஞபாங்க்" தேலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்திலேனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விகித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்களை, கோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத் தக்கதாக, கமிஷனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பி. ஜோசேப்,
(Y. 188. 21.10-35—20-10-36.) தி மனேஜர்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம் 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொலைவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
(Y.203. 21.11.35—20-11-36) (தி.) மானேஜர்

சிவன் வேப்புத் தைலம்.

செம்மேகம், கருமேகப் பத்துக்கள், குஷ்டம், குறைநோய், அரிப்பு, தடிப்பு, கிரந்தி, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகஊறல், கக்கூஸ்பத்துக்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய குலை ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விக்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பத்தி, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம்.

12காசு புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.

தீராதெனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக் கணக்கில் குணமாகிவிட்டன.

தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, சுவாசகாசம், பக்கசூடு, சோகை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய ரோகங்களையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சீராய் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீரூறல், இனிப்புத் தோன்றல், மலமந்தம், ஆகிய பீனிசரோகங்களையும் கண்டிப்பாய்க் குணஞ்செய்கிறது.

இருமல், இளைப்பு சுகம்.

"என்னைப் பத்துவருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தீர்காத்தல், சன்னலுருக இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்றாஹீம், . திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அநுபானம், தாளீசபத்திரி சூரணம், உள்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:— வெளிநாட்டார் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
(Q 19. 27-4 to 26-7-36) தி (PALNI S. 1.)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பேர்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்திரங்களும் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, அமாசல்தாரா, பீதாரு, சாலாமுஸ்லி, சபேதுமுஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதாம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் திருபஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
விஞ்ஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
சாத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.
Y46 1-1-36 to 31-12-36) இரோசன்.

"NEW ERA SERIES"
OF
School Text Books

பாடசாலைகளுக்குரிய
புதிய தமிழ் நூல்கள்
செந்தமிழ்க் கருவூலம்
(1—3)
கதாவாசகம்
முதலியன.
அரசினர்
துவிபாஷா ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
இயற்றியவை.
விரைவில் வெளிவரும்.
(Q. 22. 1-5-36—31-7-36). (தி)

பல் வைத்திய விளம்பரம்

யப்பானிய பல் வைத்தியரான எஸ் இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரியதெருவிலுள்ள திருச்செல்வம் பில்டிங்கில் நிகழு யூன் மாசம் 7ந் திகதி தொடக்கம் 16ந் திகதி வரையில் பல வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பர்.

(Mis. 48. 4 & 8-6-36)

விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

1	பந்தி	(கலம்)	ரூபா	10-00
½	,,	,,	,,	5-50
¼	,,	,,	,,	3-00
1	அங்குலம்		,,	1-00

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil.

நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற
மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.
6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்தல், என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளியிலிருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

னிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்த்துதிரிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டேன்றது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332. 20-3-36 to 19-9-36)

பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

யாழ்ப்பாணப் பட்டினம்	தமிழ்	ஆங்கிலம்	இருபிரதிகளும்
	ரு. ச.	ரு. ச.	ரு. ச.
(தபாற்கூலி எல்லைக்குட்பட)			
ஒருவருடத்திற்கு	5 - 00	5 - 00	9 - 00
½ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00
¼ வருடத்திற்கு	2 - 00	2 - 00	3 - 75
இலங்கை இந்தியா			
ஒருவருடத்திற்கு	8 - 00	8 - 00	12 - 00
½ வருடத்திற்கு	4 - 50	4 - 50	7 - 00
¼ வருடத்திற்கு	2 - 50	2 - 50	4 - 50
சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள்			
ஒருவருடத்திற்கு	9 - 00	9 - 00	13 - 00
½ வருடத்திற்கு	5 - 00	5 - 00	7 - 50
¼ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-
ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ் மார்ட்"
89. கோவில்தெரு,
தும்பனித்தெரு.

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press :-Vannarponnai, Jaffna on Monday, June 8th 1936.